SUPPLEMENT TO THE "CATHOLIC GUARDIAN"

1876-ம் வருஷம்
ஆரம்பிக்கப்பட்டது

Telegrams:
"CATHOLIC PRESS"
JAFFNA.

Telephone:
NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்


"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

75-ம் புத்தகம் 12-ம் இல. யாழ்ப்பாணம் 1950-ம் ஆண்டு பங்குனிமாசம் 23-ந் திகதி வியாழக்கிழமை—பிரதி சதம் 10

## பாத்திமா மாதாவின் லங்கா விஜயம்

### —: வைகாசி 22 முதல் ஆடி 15 வரையில் :—

பலநாடுகளிலும் திருயாத்திரைசெய்து அங்கங்கெல்லாம்சமயபேதம், சாதிபேதமில்லாது மக்கள் அனைவரையும் பரவசம் அடையச் செய்துவருகின்ற பாத்திமா நாயகியின் உலகப்பிரசித்திபெற்ற திருச்சுரூபமானது, நமது செல்வநாடாகிய ஸ்ரீலங்காவுக்கும் தரிசனையருளுமாறு இந்தியாவிலிருந்து அடுத்த வைகாசி மாசம் 22-ந்தேதி திங்கட்கிழமை ஆகாயமார்க்கமாக இரத்மலானை விமானநிலையம் வந்துசேரவிருக்கிறதென்னும் சுபசெய்தியை மாதாவின் பக்தகோடிகளுக்கெல்லாம் மகிழ்வுடன் தெரிவிக்கின்றோம். அதனால் பாத்திமாநாயகியின் இந்த அற்புத திருச்சுரூபத்தை ஏனையநாடுகளிற் போன்று இங்கும் ஆடம்பரமாக வரவேற்று மாதாவுக்குத் தங்கள் வணக்கவழிபாடுகளை ஆசாரத்துடன் சமர்ப்பிக்க ஸ்ரீலகாவில் வாழும் பல்லாயிரக்கணக்கான கத்தோலிக்கமக்களுக்கு அரியதோர் சந்தர்ப்பம் கிடைத்திருக்கின்றது.



#### திருயாத்திரை ஆரம்பம்

பிரஸ்தாபமிக்க இத்திருச்சுரூபமானது, மத்தியகிழக்குநாடுகள், இந்தியா, இலங்கை, தூரகிழ் நாடுகள், ஆஸ்திறேலியா, நியூசிலாந்து ஆதியவற்றிலே சுற்றுப்பிரயாணஞ் செய்வதற்கெனச் சென்றவருடம் கார்த்திகைமாதம் 25-ந்திகதி போர்த்துக்காலின் தலைப்பட்டணமாகிய லிஸ்பன் நகரிலிருந்து எடுத்துக்கொண்டு வரப்படும் வழியிலே றோமாபுரிகண்டு வரலாயிற்று.

#### ஓர்அற்புத சம்பவம்

தென்னிந்தியாவிலே, குமரிமுனையில் சமீபத்திலே இத்திருச்சுரூபம் பூசிதமாக எழுந்தருளச்செய்து வணங்கப்பெற்றபோது நிகழ்ந்த புதுமைஒன்று பின்வருமாறு எடுத்துச்சொல்லப்படுகிறது. ஏழுவருடங்களுக்குமேல் ஊமையும் செவிடுமாய்இருந்து வந்த 22 வயசுடைய ஓர்தமிழ் வாலிபர் குமரிமுனையில் இச்சுரூபம்வந்துசேர்ந்த அன்றுதினமே தனக்குண்டான ஊமையும் செவிடும்நீங்கித் திடீரெனக் குணமடையலாயினர். ஓர்இந்துசமயத்தவரான இவர் ஓர்வேலைதேடி ஏழுமாசங்களுக்குமுன் கோவளம் வந்திருந்தார். தற்போதுஇவர் நன்றாக எதையும் கேட்பதாகவும், பேசுவதாகவும், கத்தோலிக்கமறையில் சேர்ந்துகொள்வதற்கு ஆயத்தமாய் இப்போது வேதசத்தியங்களைப் படித்துவருவதாகவும் அறிவிக்கப்படுகிறது. பாத்திமாதிருச்சுரூபம் சென்றதைமாசம் 31-ந்திகதி குமரிமுனையைச்சேர்ந்த கோவளம் வந்துசேரலாயிற்று.

#### சுற்றுப்பிரயாணம்

திருச்சுரூபம் வைகாசிமாதம் 22-ந்திகதி இரத்மலானைவிமானநிலையம் வந்துசேர்ந்ததும் பொதுசனங்களாலும், விசேஷமாய் விமானநிலையத்தைச் சூழவிருக்கும் இரத்மலானை. தெகிவலை, வெள்ளவத்தைவிசாரணைப் பங்குகளைச்சேர்ந்த கத்தோலிக்க மக்களாலும் வரவேற்கப்படும். பின்னர்,

கோழும்பு அதிமேற்றிராசனத்திலே வைகாசி 22 முதல் 26-ந் திகதிவரையிலும்,

சிலாபமேற்றிராசனத்திலே வைகாசி 26 முதல் ஆனி 2-ந்திகதிவரையிலும்,

யாழ்ப்பாணமேற்றிராசனத்திலே ஆனி 2 முதல் 13-ந் திகதி வரையிலும்,

திரிகோணமலை மேற்றிராசனத்திலே ஆனி 13 முதல் 22-ந் திகதிவரையிலும்,

கண்டி மேற்றிராசனத்திலே ஆனி 22 முதல் 29-ந்திகதி வரையிலும்,

காலி மேற்றிராசனத்திலே ஆனி 29 முதல் ஆடி 6-ந் திகதி வரையிலும்,

கோழும்பு அதிமேற்றிராசனத்திலே திரும்பவும் ஆடி 6 முதல் 15-ந்திகதிவரையிலும் சுற்றுப்பிரயாணஞ் செய்து முடித்துக்கொண்டு சிங்கப்பூருக்குப் பிரயாணமாகும்.

#### மாதாவின் தூது என்ன ?

பொதுவிலே திருச்சுரூபம் ஸ்ரீலங்காவில் 55 தினங்களாகச் சுற்றுப்பிரயாணஞ் செய்யவிருக்கிறது. கொழும்புஅதிமேற்றிராசனத்திலே இதன்சுற்றுப்பிரயாணசம்பந்தமாய்ச் சகல ஒழுங்குகளையும் கண்காணிப்பதற்கெனக் கொழும்புமேற்றிராசன கத்தோலிக்க ஐக்கியசங்கத்தின் நிர்வாகசபை ஒன்று சமீபத்திலே நியமிக்கப்படவிருக்கிறது. மேல்நாடுகளிலே "மிரட்டல் யுத்தம்" உலகசமாதானத்துக்குப் பேராபத்தை அதிகரிக்கச்செய்துகொண்டிருக்கும் இச்சந்தர்ப்பத்திலே பாத்திமாநாயகியின் யாத்திரைச்சுரூபமானது தேசங்கள்மத்தியிலே சமாதானத்தினதும், நல்மனத்தினதும் ஓர்தூதாக உலகமுழுவதும் சுற்றுப்பிரயாணஞ் செய்துகொண்டிருக்கிறது. பாத்திமா அன்னை எம்பத்திக்கு எழுந்தருளிவர இன்னும் அறுபது தினங்கள் இருக்கின்றன. அதனால் அத்திருஅன்னை எமக்குக் கொண்டுவரும் தூதுஎன்ன? பாத்திமாவிலே மூன்றுசிறுவர்ளுக்கு அளித்தகாட்சியில் அறிவித்தவைகள் என்ன? என்பவைகளைச் சரிவர அறிந்து அத்தாயின்வரவிற்கான ஞான ஆயத்தங்களைச் செய்யவேண்டும். பாத்திமாவிலே மாதா அறிவித்த செய்திகளைத் தெளிவாக அறிந்துகொள்ள அவர்கள் மூன்றுசிறுவர்கள் எனும்நாமத்துடன் நவமாக வெளிவந்திருக்கும் அருமையான புத்தகம் மிகவாய்ப்பானது.

---

#### அன்புடன் ஏற்றுக்கொள்வாள்

சென்னைத் தேசாதிபதியாகிய பவநகர் மகாராஜா சென்ற 21-2-50 செவ்வாயன்று தூத்துக்குடியிலுள்ள ஆரோக்கியபுரத்தில் நிறுவப்பட்டிருக்கும் அர்ச். சூசையப்பர் குஷ்டரோக ஆஸ்பத்திரிக்கு விஜயஞ்செய்தபோது, மகாவந். தூத்துக்குடி மேற்றிராணியாண்டவர் "பாத்திமாஇராணி—பவநகர் இராணியை ஆசீர்வதிப்பாராக என்று சொல்லி, அமெரிக்க ஐக்கிய தேசத்திலிருந்துவந்த செப்பரிய அழகுவாய்ந்த பாத்திமாமாதா சுரூபம்ஒன்றை மகாராஜாவின் கையில்கொடுத்தார். எதிர்பாராத இந்தவெகுமானத்தை மகாராஜா ஆனந்தஅக்களிப்புடன் பெற்றுக்கொண்டு "பாத்திமாஇராணி சுரூபத்தை—பவநகர்இராணி அன்புடன் ஏற்றுக்கொள்வாள்" என்பதில் கிஞ்சித்தேனும் சந்தேகமில்லை; இந்தஆஸ்பத்திரியில் குஷ்டரோகிகளுக்குத் தாய்க்குரிய அன்புடன் சிகிச்சைசெய்துவரும் கன்னியாஸ்திரிமாருக்கு நன்றிசெலுத்துகிறோம் எனக் கூறிநின்றார்.

#### யூதகுருவின் சாட்சியம்

அமெரிக்கஐக்கியதேச சிங்சிங்சிறைச்சாலையில் இருந்துவருகின்ற கோல்ட்ஸ்ரைன் எனும் யூதகுரு கத்தோலிக்கதிருமறையைப்பற்றிப் பின்வருமாறு கூறியிருக்கின்றார். "கத்தோலிக்க சமயமே ஒழுக்கத்தின் எல்லை. பரிசுத்தபாப்பரசர் நவீனமுறைகளை ஒருபோதுமே தமதுசமயத்தில் புகுத்தமுடியாது. விவாகரத்து, அதாவது விவாகப்பிரிவு ஒருபோதுமே கத்தோலிக்கமறையில் அனுமதிக்கப்படமாட்டாது. அப்படியல்லவென்று அம்மறையில் அது அனுமதிக்கப்பட்டால் உலகில் நாகரீகமும், கலாசாரமும் அடியோடு நசிந்துவிடும்" என்பதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யூதாசின் அவநம்பிக்கை

**[ திருஇருதய சபையைச்சேர்ந்த யோசெபா மெனென்டெஸ் எனும் பரிசுத்த கன்னிகாஸ்திரிக்கு யேசுக்கிறீஸ்துநாதர் அருளிய காட்சி ஒன்றின்போது வெளிப்படுத்தியது]**

ஒலிவமாத்தோப்பில் என்னை எதிரிகளிடம் காட்டிக்கொடுத்த பிற்பாடு யூதாஸ் சுற்றித்திரிந்தான்; அவன் செய்த மிகப்பெரும் தேவதுரோகம் அவனுடைய மனச்சாட்சியை உபாதித்தது; நான் மரணத்துக்குத் தீர்ப்பிடப்பட்டேன் என அவன் கேள்விப்பட்டதும், அவன் அவநம்பிக்கைக்குள்ளாகி நான்றுகொண்டு செத்தான்.

நான் நேசித்து நெடுநாள் படிப்பித்துவந்த இந்த ஆத்துமத்தை நான் பார்த்ததும் என் இருதயம் பட்ட துயரத்தை யார் அளவிடமுடியும்? அவன் என் போதனைகளை ஏற்றுக்கொண்டவன்; மிகப்பெரிய அக்கிரமங்களுக்கும் நான் மன்னிப்புக்கொடுத்ததை என் வாயிலிருந்தே கேட்டிருந்த அவன், கடைசியாகத் தன்னை நித்தியகேட்டுக்குள் வீழ்த்திக்கொண்டான்.

ஆ, யூதாஸ்! நீ வந்து என்பாதத்தில் ஏன் விழவில்லை? உனக்கும் நான் மன்னிப்புக் கொடுத்திருப்பேனே! என்னைச் சுற்றியிருந்த கூட்டம் கோபத்துடன் கூவிக்கொண்டிருந்தமையால் நீ என்னிடம் வரப் பயப்படுகிறதாயிருந்தால், என்னைப் பார்க்கக்கூடாதா?... என்கண்கள் உன் கண்களைச் சந்திக்கும்—இப்பொழுது முதலாய் அவை உன்னையே நேசத்துடன் நோக்குகின்றன.

பாவத்தில்மூழ்கி உங்கள் பாவங்களை முன்னிட்டு, என்னைப் பிரிந்து நெடுநாளோ அல்லது சொற்ப நாளோ அலைந்து திரிகிறவர்களே, நீங்கள் செய்துள்ள பாவங்கள் உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்திக் குருடாக்கியிருக்குமானால், உங்களுடைய ஆசாபாசம் ஒன்றைத் திருப்திப்படுத்தும்படி பாவபாதையில் விழுந்துவிட்டீர்களானால், நீங்கள் பாவத்தில்விழக் காரணமாயிருந்தவர்கள் அல்லது உங்களுடன் பாவம் செய்தவர்கள் உங்களைக் கைவிட்டுவிட்டால், உங்கள் ஆத்துமஸ்திதியை நீங்கள்உணரும்பொழுது, ஓ அப்பொழுது அவநம்பிக்கைக்கு இடங்கொடாதேயுங்கள்; ஏனெனில் உயிர் இருக்கும்வரை ஒருவன் இரக்கத்தினிடம் சென்று மன்னிப்புக்கேட்கலாம்.

நீ இன்னும் வாலிப வயதினனாயிருந்தால், உன் வாழ்க்கையில் நீ காண்பித்துள்ள துர்மாதிரிகைகளால் நீ உலகத்தின்மதிப்பை இழந்துபோனால், பயப்படாதே. உன்னைக் குற்றவாளியாகத் தீர்ப்பிட்டு, குற்றவாளியேபோல் நடத்தி நிந்தித்துத்தள்ளிவிடக் காரணமிருந்தபோதிலும், நீ நரகஅக்கினிக்குள்விழ உன்கடவுள் விரும்புவதில்லை.

உன்னை அணுகி உன்னை மன்னிக்க அவர் வெகு ஆசையாயிருக்கிறார். நீ அவாருகிற்செல்லத் துணியாவிட்டால் உன் இருதயத்தின் பெருமூச்சுகளாவது அவரை அணுகும்படி விடு. உடனே தகப்பனான அவருடைய கரங்கள் மன்னிப்பினுடையவும் சீவியத்தினுடையவும் ஊற்றண்டை உன்னை இட்டுச்செல்லும்படி நீட்டப்பட்டிருப்பதைக் காண்பாய்.

உன்வாழ்க்கையின் பெரும்பாகத்தைப் பாவத்திலும் அசதியிலும்செலவழித்து, திடீரென மரணம்வந்து உன்னை அவநம்பிக்கைக்குள்ளாக்கி, உன் கண்களை நித்தியத்துக்கும் மூடப்போவதாகப் பயப்படுத்துகையில், நீ அவநம்பிக்கைக்குள்ளாகும்படி விட்டுவிடாதே. வாழ்க்கையில் இன்னும் ஒரு விநாடி மாத்திரமே உனக்கு இருந்தபோதிலும், மன்னிப்புக்கு இன்னும் நேரம் இருக்கிறது. இது நிச்சயம். அந்த ஒரு விநாடியில் நித்தியசீவியத்தை நீ திரும்ப விலைக்கு வாங்கிக்கொள்ளலாம்.

உன் வாழ்நாள் முழுவதையுமே நீ அறியாமையிலும் தப்பிதங்களிலும் செலவழித்திருப்பாயானால்; மற்ற மனிதர்களுக்கும் சமூகத்துக்கும் மதத்துக்குமே பெருந் தீமையின் காரணமாக நீ இருந்திருப்பாயானால், உன் ஆத்துமத்தின் நிலையையும் உன் தப்பிதத்தையும் நீ அறிய வருவாயானால், உன் பாவங்களும் நீ இழைத்த தீமைகளும் உன்னை நசுக்க விடாதே; ஆனால், ஆழ்ந்த மனஸ்தாபம் நிறைந்த இருதயத்துடன், நம்பிக்கை என்னும் ஊற்றில் உன்னை எறிந்துவிடு. உன்னை மன்னிக்கும்படி உன் வரவை எதிர்பார்த்திருப்பவரிடம் விரைந்து செல்.

சிறு வயதிலிருந்தே என் சட்டங்களைப் பிரமாணிக்கமாய் அனுசரித்து, நாளடைவில் அசதி கொள்பவர்களுக்கும் நான் இதையே சொல்கிறேன்.

ஒருநாள் அந்த ஆத்துமம் உண்மையைக் கண்டறிகிறது. வாழ்க்கையே வெறுமனைத் தோன்றுகிறது. மோட்சம் அடைய முடியாது எனத் தோன்றுகிறது. பசாசு பொறுமையுடன் அந்த ஆத்துமத்தைப் பலதிசைகளிலும் இழுத்து, அதை அதைரியப்படுத்தி விசனத்திலாழ்த்தி... அதன் குற்றங்களைப் பெரிதாக்கி, கடைசியாக அதைப் பயப்படுத்தி அவநம்பிக்கைக்குள்ளாக்குகிறது.

ஓ என்னுடையவனான ஆத்துமமே, இந்தக் கொடியசத்துருவின் பேச்சைக் கேளாதே... என் வரப்பிரசாதம் உன் இருதயத்தைத் தொட்டதும் போர் தொடங்குமுன்னரே, என்னை நாடிவா. என் இரத்தத்தில் ஒருதுளி உன் மீது ஊற்றும்படி என்னைக் கெஞ்சிக்கேள். என்னிடம் வா, சற்பிரசாத திரையினுள் நான் எங்கேஇருக்கிறேன் என உனக்குத் தெரியும். திரையைத் தூக்கு, உன் நிர்ப்பாக்கியத்தையும் தவறுதல்களையும் பற்றிய வரலாற்றை முழு நம்பிக்கையுடன் திறந்துசொல். என் வார்த்தைகளுக்கு வணக்கத்துடன் செவிகொடு. கடந்தகாலத்தைப்பற்றிப் பயப்படாதே. என்நேசம் இரக்கம் என்னும் அலைகளினால் உன் பழைய பாவங்கள் யாவும் மூடப்பட்டுவிட்டன. நீ தாழ்ச்சியுள்ளவனாயிருக்க உன் பழையபாவங்கள் ஓர் தூண்டுகோலாயிருக்கும்; உன் பேறுபலனை அதிகரிக்கும். உன் நேசத்துக்குச் சிறந்தஅத்தாட்சி காண்பிக்க நீ விரும்புவாயானால், நான் மன்னித்துவிட்டேனெனவும், உன் பாவங்கள் ஒருபோதும் என் இரக்கத்துக்குச் சமமாகா என்றும் நம்பு; ஏனெனில் என் நேசமும் இரக்கமும் அளவற்றது.

"அன்பின் அருங்குரல்"

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

அர்ச். பிரான்சீஸ் சவேரியார், அர்ச். ஆசீர்வாதப்பர், அர்ச். ஆரோக்கியநாதர், அர்ச். அந்தோனியார் என்போரது மன்றாட்டினால் நான் கேட்ட வரம் கிடைக்கப்பெற்றேன். இவர்களின் நாமங்கள் யாவராலும் புகழப்படுவதாக. நேர்த்தியின்படி இதைப் பிரசுரிக்கிறேன்.

நல்லூர் R. F.

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் திருஇருதய இரக்கத்தாலும், பரிசுத்த தேவமாதா, அர்ச். சூசையப்பர், பதுவை அந்தோனிமுனீந்திரன் இவர்களின்மன்றாட்டாலும், சங்.சகோதரி அல்போன்சம்மாள்மேல்வைத்த பக்தியினாலும் எனது மகன் வெகுநாட்களுக்குப் பின் நடக்கத்துவங்கினான். கடைசிவரை காப்பாற்றி வைப்பார்களாக.

கொழும்பு (பெரியதாழை) J. D. C.

# கத்தோலிக்க சமாச்சாரம்

## பாத்திமாஆரோக்கியம்

நவனநகரிலே அநேகவருடகாலமாக இருகால்களிலும் பாரிசவாதங் கண்டுவருந்திய ஓர்மனுஷி அற்புதமாகக் குணமடைந்தமையானது பாத்திமாமாதாவின் சலிகையாலெனக் காரணங் கூறப்படுகிறது. ஸ்ரீமதி எவ்விரு டேகோப்எனும் இந்தமாது பாத்திமாநாயகியின் யாத்திரைச்சுரூபம் வைத்துப் பத்திபண்ணப்பெற்ற ஏழைகளின் மாதாகோவிலுக்குக் கொண்டுபோகப்பட்டாள். இவள் அச்சுரூபத்தின்முன்பாகச் செபஞ்செய்தாள். அதனை முத்தமிட்டாள். தன்னைக் குணமாக்கவேண்டுமென்று மாதாவை இரந்துகேட்டாள். பின்னர் வீடுதிரும்பியதும் தனது கக்கதண்டங்களைக் கைவிட்டு, அதுமுதல் அவைகள் இல்லாமலே நடக்கக்கூடியவளானாள். "இது பற்றிய அனுமான தோற்றங்கள் எல்லாவற்றிலுமிருந்து அற்புதம் ஒன்று நடந்திருக்கிறதென்றே எண்ணக்கூடியதாய் இருக்கிறது. ஆயினும் தீர்மானிப்பது திருச்சபையின்வேலை" என்று சந்தியாகோநகர் அதிமேற்றிராணியார் கூறுகின்றார்.

## முத். தோமினிக் சவியோ

அர்ச்.ஜோண்பொஸ்கோவின் மாணவரில் ஒருவராய்ப் புதிதாக முத்திப்பேறுபெற்றபட்டம் அருளப்பெற்றவரான 14 வயசுடைய தொமினிக் சவியோவின் திருப்பண்டங்களைப் பூசிக்குமாறு நிகழும் பங்குனிமாதம் 5-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை சாயந்தரம் பரிசுத்தபாப்பரசர் 13 கருதினால்மார், 50 அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமார்சமேதராய் எழுந்தருளியபோது ஒருலட்சம்பேருக்குமேற்பட்டமக்கள் அர்ச். பேதுருவானவர் ஆலயத்துட்செல்ல முயன்றார்கள். ஆனால், 60,000 பேர் வெளியேநிற்க 45,000 பேர் உட்பிரவேசித்தும் இடமில்லாமையால் ஆலயக்கதவுகள் சாத்தப்படலாயின. அன்றுகாலை முத்திப்பேறுபெற்றபட்டம் அருளும் திருவைபவத்திற்கு 8 கருதினால்மாரும், 30 அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமாரும், 35,000 மக்களும் சமுகமளித்திருந்தார்கள். உலகின் அநேக பகுதிகளிலிருந்து சலேசியயாத்திரிகரும்சென்று திரளாகச் சமுகமாயிருந்தார்கள். இந்தப்பெரும் சனக்குழாமின்மத்தியிலே முன்னர் ஜேர்மனியில் ஓர்யுத்தகைதியாக இருந்தவரும், சிசிலிதீவைச்சேர்ந்த சியானேநகர்வாசியும், புதியமுத்திப்பேறுபெற்ற பட்டதாரியின்சலிகையால் குணமடைந்தவருமான சபாரினோ அல்பானோ என்பவரும் சமுகமாயிருந்தார்.

## மகுடதாரணவிழாப்பூசை

தமதுமகுடதாரண பதினோராம் வருட நிறைவுவிழாநிமித்தமாய் நிகழும்பங்குனிமாதம் 12-ந்திகதி பாப்பரசர் திவ்வியபூசை நிறைவேற்றியபோது மற்றுமோர் சனத்திரள் அர்ச். பேதுருவானவர் ஆலயத்திலும், அதன் முற்புறமைதானத்திலும் தேங்கியிருந்தது. முதன்ஞாயிறன்றே அவர் திவ்விய பூசை நிறைவேற்றவிருந்தார். ஆனால் யாதோமுகாந்தரமாக அது ஓர்நாள் பின்போடப்படலாயிற்று. அவர்தமது 74-வது பிறந்தபெருநாளையும், தாம் பாப்பரசராகத் தெரியப்பெற்ற வருடாந்த சுபநாளையும் செபத்திலும், வேலையிலும் செலவிடலாயினர். வத்திக்கான்இராச்சியத்தில் சஞ்சரிப்பவர்கள் ஆயிரம்பேருக்கும் அன்று விடுமுறையாயிருந்தது. அன்றுதினம் உலகின்சகலபகுதிகளிலுமிருந்து அவருக்குச்சோபனசெய்திகள் சென்றுகுவிந்தவண்ணமிருந்தன. அன்று அவர் அளித்த பேட்டிகளுள்ஒன்றில் மாத்திரம் ஒருமணிநேரம் செலவிட்டு ஆங்கில, பிரஞ்சிய, ஸ்பானிய, போர்த்துக்கேய, ஜேர்மனிய, இத்தாலியபாஷைகளில் பேசலாயினர்.

## அமெரிக்கரின் திருயாத்திரை

நியூயோக்நகர் அதிமேற்றிராணியாரான கருதினால் யோசெவ் ஸ்பெல்மன் ஆண்டவரைத் தலைமையாகக் கொண்டு ரோமாபுரி போய்ச்சேர்ந்த பரிசுத்தவருட அமெரிக்க யாத்திரிகருக்கென நிகழும்பங்குனிமாதம் 6-ந்திகதி பரிசுத்தபிதா ஓர்விசேஷ திவ்வியபூசை நிறைவேற்றினர். இவர்களுடன் மினேசோட்ராவைச்சேர்ந்த சென்கிளவுட்நகரிலிருந்து ஆகாயவிமானங்களில் போய்ச்சேர்ந்த வேறு 105 அமெரிக்கயாத்திரிகரும் சேர்ந்துகொண்டனர். கருதினால் ஸ்பெல்மன் ஆண்டவர் ஒருமணிநேரம் பாப்பரசரது அந்தரங்கபேட்டி பெற்றதன்மேல் தாம்சென்ற ஐப்பசி மாசம் கண்டபோது பார்க்கிலும் பாப்பரசர் தற்போது கூடியவரையில் சுகமுடையவராய்க் காணப்படுவதாகத் தெரிவித்தார்.

## வத்திக்கான் 'சேர்ச்சில்'

வத்திக்கானிலிருந்து பிரசுரமாகும் "ஒசேர் வாத்தோறே ரோமானோ" எனும் பாப்பரசரது சொந்தப்பத்திரிகை 1900-ம் ஆண்டுமுதல் பரிசுத்தஸ்தானத்தின் பூரணசொத்தாய் இருந்துவருகிறது. 1929-ம்ஆண்டு லத்தரன் உடன்படிக்கைக்குக் கைச்சாத்து இடப்பட்டபின்னர் இதன் அச்சகம் புதியவத்திக்கான் இராச்சியத்தில் கொண்டுபோய்அமைக்கப்படலாயிற்று. இதில்பிரசுரமாகும் தமதுசொற்பொழிவுகள் அச்சேறுமுன் பாப்பரசர்தாமே அவைகளைப் பிழைதிருத்திக்கொடுக்கின்றார். ஒவ்வோர்சாயந்தரமும் அச்சிடப்படும் முதற்பிரதிகளில்ஒன்று அவரதுவிலாசமிட்டு, வத்திக்கான்மாளிகையிலுள்ள அவரின் மேல்மாடத்தில் கொண்டுபோய்க்கொடுக்கப்பெற்று அவராலேயே பிரிக்கப்படுகிறது. இப்பத்திரிகையைத் தற்போது முகாமை வகித்துநடத்துகிறவரும், அதன்பிரதம ஆசிரியராய் இருந்துவருகிறவரும் கவுண்ட் தல்லா தோறே பிரபுவே. கடந்தமுப்பதுஆண்டுகளாக இவர் அதனைத் தலைமைவகித்துப் புகழ்ச்சிக்குரிய விதமாய் நடத்திவருகின்றார். இவர் தமது துணைஆசிரியர்களாலும், பிறராலும் 'வத்திக்கான் சேர்ச்சில்' எனும் சிறப்புப்பெயரால் அழைக்கப்படுகின்றார். 64 வயசுடையவரான இவர் தமது சிறந்தபேச்சாலும், எழுத்தாலும் பிரித்தானிய மாஜி பிரதமர் திரு. வின்ஸ்டன் சேர்ச்சிலைநிகர்த்து விளங்குகின்றார். இவர் ஓர் வத்திக்கான் பிரசையாகவே இருந்துவருகிறார்.

## நேருஜிக்குப் பாராட்டுரை

தூத்துக்குடியிலே சென்ற 21-2-50 செவ்வாய்க்கிழமை சாரணர்களின் வெள்ளிவிழா பவநகர்மகாராஜா சமுகத்தில் நடைபெற்றபோது, மகாவந். தூத்துக்குடி மேற்றிராணியாண்டவர் இந்திய பிரதமர் நேருஜி அவர்களின் படத்தைத் திறந்துவைத்துப் பேசியவிடத்துக் கூறியதுவருமாறு: "நேருஜி அத்துணை ஜயவீரராய் விளங்க முக்கிய காரணங்கள் எவை? (1) அவர் பெற்றோரின் நற்குணநற்செய்கைகளைக் கண்டுபாவித்தார். அவர் தங்கள் ஏக புதல்வராய் இருந்த போதிலும் பெற்றோர் அவருக்கு இளக்காரங்கொடுக்கவில்லை. (2) மேல்நாட்டின்படிப்பும், கீழ்நாட்டின் நற்பழக்கமும். அவர் ஆங்கிலத்தைக் கசடறக் கற்காதிருந்தால் அவருக்குத் தற்போது கிடைத்துள்ள பெரும் புகழும் கிடைத்திருக்கமாட்டா. எந்தத்தேசத்தாரையும்துவேஷிக்கப்படாது. சாரணர்களின் ஒழுங்குப்பிரகாரம் அவர்கள் சகலரையும் நேசிக்கவேண்டும். இவ்வுலகில் நிரந்தரசமாதானம் ஏற்படவேண்டுமேயானால், கடவுள் எல்லோருக்கும் பொதுத்தகப்பன், சகலமனிதர்களும் சகோதரர்கள்என்று ஒப்புக்கொள்ள வேண்டும். இந்த அடிப்படையான சத்தியத்தை ஒப்புக்கொண்டால் அணுக்குண்டும் தேவையில்லை, சலவாயுக்குண்டும்தேவையில்லை" என்பதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூதுசென்ற சூசைமாதவன்

[ "தேம்பாவணியை" ஆதாரமாகக்கொண்டு எழுதியது. ]

(முன்தொடர்ச்சி)

மைந்தனே மைந்தன்என்ப
வரமெனக் (கு) அளித்திநீயே
தந்தநேர் அகன்றநன்றி
தனக்(கு)எனல் கைம்மா(று)என்னே
சிந்தல்நேர் எனக்குச்செய்த
சீர்அள(வு) இடுக்கண்யாவும்
கொந்தல்நேர் விளையக்கொய்தி
கொய்தருள் விளைத்திநல்லோய்

மகனே! உன்னைநான் மகன்என்னும்படி நீ அன்றோ எனக்கு வரந்தந்தாய். அத்தோடு எனக்குத்தந்த நிகராகாத நன்மைக்கெல்லாம் என்னால்ஆகும் கைம்மாறுதான் ஏதோ? ஒழுகும் ஆறுபோல எனக்குச்செய்தருளிய செல்வங்களின் அளவாக, என்னுற்துன்பங்களே சினத்தோடுவிளையப் பலனைக் கொண்டாயே. அவ்விதம் என்னால் துன்பத்தைக்கொண்டும் எனக்குத் தயையை விளைவித்தாய் நல்லோய்!

நிந்தைஎன்(று) உடைநான்ஒங்க
நிமிர்ந்தவான் வியப்பஎன்னை
எந்தை என் றனைநீ உந்தைக் (கு)
இரங்கிநல் ஆசிதேவ
தந்தையின் பணியைச்செய்யத்
தருதிஎன்(று) அடியில்வீழச்
சிந்தையின் எழுந்த(து) ஆற்றாத்
திருமகன் தாங்கினனே

எந்நாளும் நிந்தைக்குரியநானே மாட்சியில் ஓங்கும்படியும், உயர்ந்த வானுலகெல்லாம் அதிசயிக்கும்படியும் என்னைநீ என் பிதா என்றாய்; இப்போது உன்பிதாவுக்குஇரங்கி அத்தேவ பிதாவின் பணிவிடையைச் செய்துமுடிக்க நல்லாசீர்வாதம் தருவாயாகஎன்று பாதத்தில்விழ மனதிற்துணிந்து படுக்கைவிட்டு மேலே எழுந்தபோது, அவ்விதம் எழுந்துகொள்ள முடியாமல் கீழேவிழுகையில் திருக்குமாரன் அவனைத்தாங்கினன்.

மூவுல(கு) அனைத்தும்தாங்கும்
முதலவன் ஒருபால் ஓர்பால்
தேவுல(கு) அனைத்தும் ஏத்தும்
தேவதாய் தாங்கச்சூசை
மேவுல(கு) உள்ளியாக்கை
விடுமுயிர் தனைஅன்(பு) ஒன்றே
பூவுல(கு) இருத்தினற்போல்
பூங்கரம் கூப்பிநின்றான்.

அங்ஙனம் உலகம்மூன்றினையும் தாங்கிநிற்கும் முதல்வன் ஒருபுறத்தில்தாங்க, வானுலகெல்லாம் வணங்கும்தேவதாய் மற்றோர்புறத்தில்தாங்க, பிதாவாகியகடவுள் கற்பித்த உலகிற்குப் போகநினைந்து, தனதுஉடலை விட்டுப்பிரியும்உயிரை அன்புதான்ஒன்றே இன்னும் பூவுலகில் இருத்தினற்போல இருவரையும்வணங்கித் தனது மலர்க்கரம் கூப்பிநின்றான்.

பன்னலால் நிகரா வண்ணம்
பயன்உறற் பெற்றேன் நானே
மின்னலாய் உனக்(கு)ஈங்(கு) என்னால்
விளைந்தபல் கச(டு)உண்டாமே
நின்னலால் பொறுப்பார் யாரே
நீத்(து) இவை அருளின் ஆர்வம்
உன்னலால் ஆசிசெய் கென்(று)
உயர்தவன் தொழுது நின்றான்

அங்ஙனம்சூசை இருவரையும் வணங்கிப்பேசாமல் கைகூப்பி நின்றபின்னர் தேவதாயைநோக்கிச் சொல்வான்: மின்னலை ஒத்தவளே! சொல்லாற்சொல்லி நிகராகாதபடியான நன்மைகளை உன்னால் நான்அடைந்தேன். ஆயின் என்னாலோ இங்கே உனக்கு ஏற்பட்ட பலகுறைகள் உண்டே. ஆயினும் உன்னையல்லாது எவர் பொறுப்பாரோ? இக்குறைகளையெல்லாம் நீக்கி உனது அன்பின்தயையை நினைப்பதாலே உனது ஆசீர்வாதம் தருவாயாகவென்று தவத்தில் உயர்ந்தவனான சூசைவணங்கிநின்றான்.

இருவரும் இருபால் ஆசி
இட்(டு)அருள் உரையில் தேற்ற
உருவரும் வானோர் சூழ
ஒலிக்குழல் இசையிற் பாடி
மருவரும் மலரைச் சிந்தி
வயவையில் விளித்து முன்னத்
திருவரும் ஆக்கை நீக்கித்
தெள்ளுயிர் போயிற் றம்மா

அங்ஙனம் இருமருங்கும் அமர்ந்திருந்த தேவமகனும் தேவதாயும் சூசைமாதவனுக்கு ஆசீர்வாதம்தந்து தயைநிறைந்த சொல்லால் தேற்றிக்கொண்டிருக்க, உருவங்காட்டித் தோன்றின வானவர்கள் வீணைகளின் இசையில் பாவிசைகளைஏற்றி வாசனை கமழுகின்ற மலர்களைச்சொரிந்து வழியில்அழைத்து முன்னே போக, தன்திருவுடலைநீத்து யாமுனிவனின் நல்லுயிர்போயிற்று.

தபசுகாலத்தின்

## 5-ம் ஞாயிறு

## (திருப்பாடுகளின் ஞாயிறு)

### சுவிசேஷ வாசிப்பு

(அரு. 8: 46—59)

அக்காலத்தில் யேசுநாதர் யூதர்கள் கூட்டத்தை நோக்கித் திருவுளம்பற்றினதாவது: உங்களில் எவன் என்னிடத்தில் பாவமுண்டென்று காட்டக்கூடும்? உங்களுக்கு நான் சத்தியத்தைச் சொல்லியிருக்க நீங்கள் ஏன் என்னை விசுவசிக்கிறதில்லை? சர்வேசுரனால் உண்டானவன் சர்வேசுரனுடைய வாக்கியங்களைக் கேட்கிறான்; நீங்களோ கேட்கிறதில்லை. ஏனென்றால், நீங்கள் சர்வேசுரனால் உண்டாகாதவர்கள் என்றார். ஆதலால், யூதர்கள் மறுமொழியாக: நீ சமாரியனென்றும், பேய்பிடித்தவனென்றும் நாங்கள் சொல்லுகிறது சரியல்லவோ? என்றார்கள். அதற்கு யேசுநாதர் மறுவுத்தாரமாகத் திருவுளம்பற்றினதாவது: நான் பேய்பிடித்தவனல்லன்; ஆனால் நான் என் பிதாவைச் சங்கிக்கிறேன். நீங்களோ என்னைச் சங்கையீனப்படுத்தினீர்கள். ஆனால், நான் என் மகிமையைத் தேடுகிறதேயில்லை. அதைத் தேடுபவரும் எனக்கு நியாயந் தீர்ப்பவருமாகிய ஒருவர் இருக்கிறார். யாராயினுமொருவன் என் வார்த்தையை அனுசரிப்பானேயாகில் என்றென்றைக்கும் அவன் மரணத்தைப் பாரானென்று மெய்யாகவே, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். அதைப்பற்றி யூதர் சொன்னதாவது: நீ பேய்பிடித்தவனென்று இப்போது அறிந்துகொண்டோம். அபிரகாமும் தீர்க்கதரிசிகளும் மரித்தார்கள். ஆயினும், நீயோ: யாராயினும் என் வார்த்தையை அநுசரிப்பானேயாகில் என்றென்றைக்கும் மரணத்தைச் சுவை பாரான் என்கிறாய். எங்கள் பிதாவாகிய அபிரகாமை விட நீ அதிகம் பெரியவனோ? அவர் மரித்தாரே; தீர்க்கதரிசிகளும் மரித்தார்களே; உன்னை யார் என்று மதித்துக்கொள்கிறாய்? என்றார்கள். யேசுநாதர் மறுமொழியாகத் திருவுளம்பற்றினதாவது: என்னை நானே மகிமைப்படுத்திக்கொண்டால், என்மகிமை ஒன்றுமில்லை. என்னை மகிமைப்படுத்துகிறவர் என் பிதாவானவர்தான். அவரைத்தான் உங்கள் சர்வேசுரன் என்கிறீர்களே. ஆயினும் நீங்கள் அவரை அறியவில்லை. நானோ அவரை அறிந்திருக்கிறேன். நான் அவரை அறியேனென்று சொல்வேனாகில் உங்களைப்போல நானும் பொய்யனாயிருப்பேன். ஆனால் நான் அவரைஅறிந்திருக்கிறதுமன்றி அவருடைய வாக்கியத்தையும் அனுசரிக்கிறேன். உங்கள் பிதாவாகிய அபிரகாம் என் நாளைக்காண ஆவலோடு ஆசித்தார்; அதைக்கண்டு களிகூர்ந்தார் என்றார். ஆகையால் யூதர்கள் உனக்கு இன்னும் ஐம்பது வயதில்லையே; அபிரகாமைக் கண்டாயோ? என்று சொன்னார்கள். யேசுநாதர் அவர்களைநோக்கி: அபிரகாம் உண்டாவதற்கு முன்னமே நான் இருக்கிறேன் என்று மெய்யாகவே, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். இதினிமித்தம் அவர்கள் அவர்பேரில் எறியும்படி கல்லுகளை எடுத்தார்கள். யேசுநாதரோ மறைந்து தேவாலயத்திலிருந்து வெளியேபோனார்.

## அறியாத கிழவனார்

நியூயோக் பட்டணத்தின் ஒருகோடியிலே சிறுகுடிசைஒன்றில் அலெக்சாண்டர்எனும் வயோதிகன் ஒருவன் வசித்திருந்தான். அவன் கப்பலிலே தொழில்செய்தவன். இப்பொழுது தரித்திரமும், இடைவிடா நோயும் அவனை உபாதித்தன. அவனுக்கு உதவிசெய்வார் எவருமில்லை. ஆஸ்பத்திரியிலும், அவனுக்கு இடமில்லையென்றனர். ஏனெனில், பணம்கொடுக்க முடியாத நிலையிலிருந்தான்.

அவன் கோவில் முகம்பார்த்தது சிறுவனாயிருக்கையில். கப்பலிலேவேலை செய்கையில் கடவுளை அவன் மறந்துவிட்டான். ஆயினும் விசுவாசம் வேரற அவனுடைய இருதயத்தில் அழிந்துவிட்டது என்னமுடியாது. ஒரேயொருகாரியம் மாத்திரம் அவன் மனதில் நன்றாய்ப் பதிந்திருந்தது. அது அவனுடையதாயின் போதனைகளில் ஒன்று. அர்ச். சூசையப்பர் மரிக்கிறவர்களின் பாதுகாவலர், நம்பிக்கையோடு அவரது மன்றாட்டின் உதவியைக் கேட்பவருக்கு எப்படியாவது கடைசியில் அவர் மோட்சவாசலைத் திறப்பாரென்று அந்தநல்லதாய் கற்பித்திருந்தாள். ஆகையால், தனக்கு நல்லமரணம் கிடைக்கும்படி அவன் ஒவ்வொருநாளும் அர்ச். சூசையப்பரைப்பார்த்து மூன்று பரமண்டலமந்திரம், மூன்றுபிரியதத்தமந்திரம் சொல்லி வந்தான். கடலிலிருந்தாலும் சரி, தரையிலிருந்தாலும்சரி, யாவராலும் கைவிடப்பட்டவனாய்க் குடிசையில் தனிவாசம் செய்திருந்தாலும்சரி இந்தச் செபத்தை ஒருநாளென்கிலும் அவன் தவறவிட்டவனல்ல.

ஒருநாள் அவனது குடிசையின் கதவை யாரோதட்டும் சத்தம்கேட்டது. உள்ளே நுழைந்தார் ஒருகுருவானவர். வயோதிகன் ஆனந்தக்கண்ணீரோடு குருவானவரை வரவேற்றுக் கடைசித்தேவதிரவிய அநுமானங்களைப் பெற்றான். பெற்றபின் குருவானவரைப்பார்த்து: "சுவாமி, நான் இங்கு சாகக்கிடப்பதை உங்களுக்குத் தெரிவித்தது யார்?" என்று கேட்டான். "சிநேகிதா, நான் முன்பின் அறியாத ஒருகிழவனார்" எனச் சுவாமியார் பதிலளித்தார்.

"ஓ, அப்படியானால் அர்ச். சூசையப்பராகத்தான் இருக்கவேண்டும். நல்லமரணம் அடையும் வரம்கேட்டுச் சிறுவயதிலிருந்து நான் செய்துவந்த மன்றாட்டை அவர் கேட்டருளினார்" என்றுசொல்லி அர்ச். சூசையப்பருடைய மன்றாட்டின்பலனாய்ச் சர்வேசுரன் தன்மீது இரக்கம்காண்பித்ததற்காக இன்னும் ஒருமுறை மூன்று பரமண்டலமந்திரம், மூன்று பிரியதத்த மந்திரம் சொன்னான். தம்மை நோக்கிச் சொற்பசெபம்செய்து வந்தவர்களுக்கே அர்ச். சூசையப்பர் இத்தனை பெரியஉபகாரம் புரிந்தால், தம்முடைய பக்தர்களுக்கு அவர் என்னதான் செய்யாதிருப்பார்.

❀ இந்துதேச அப்போஸ்தலரான அர்ச். பிரான்சீஸ் சவேரியார் 1552-ம் ஆண்டு பரமபதம்அடைந்தார். ஆகவே அவர்மரணமான 400-ம் ஆண்டு 1952-ம் ஆண்டு பூர்த்தியாகின்றது. இந்தநான்காம்நூற்றாண்டு ஞாபகார்த்தமாகக் கோவைமாநகரில் இருந்துவரும் அவரது அழியாத்திருமேனி அவ்வாண்டிலே காட்சிக்கு வைக்கப்படுமெனத் தெரியவருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர்களின் ஞானவொடுக்கம்

வருகிற சித்திரை மாதம் 19-ந் திகதி தொடக்கம் 23-ந் திகதி மட்டும் கொழும்புத் துறைத் தாபனத்தில் ஒரு ஞானவொடுக்கம் நடைபெறும்.

சென்றவருடம் கடந்த ஞானவொடுக்கத்திற் பங்குபற்றாத ஆசிரியர்கள் அனைவரும் இதிற் பங்குபற்றுவார்களென எதிர்பார்த்திருக்கிறோம். ஆகவே, இதிற் பங்குபற்ற விரும்புவோர் எமக்கு அறிவிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

T. A. J. Mathuranayagam
Actg. Gen. Manager,
R. C. Schools
Jaffna, 22-3-50.

## திருநாள் அட்டவணை

பங்குனிமாதம் 1950

| | | |
|---|---|---|
| வெ | 24 | அர்ச். கபிரியேல் அதிதூதர் — அர்ச். சிமியோன், வே. |
| சனி | 25 | தேவமாதாவுக்குச் சம்மனசு மங்களஞ்சொன்ன திருநாள் |
| ஞா | 26 | திருப்பாடுகளின் ஞாயிறு |
| திங் | 27 | அர்ச். தமசீனு அருளப்பர், த. |
| செவ் | 28 | அர்ச். கப்பிறிஸ்தான், அருளப்பர், து. |
| புத | 29 | அர்ச். எயுஸ்தாசியார், ம. |
| வியா | 30 | அர்ச். கிளிமக்கருளப்பர், ம. |

சத்தியவேத
பாதுகாவலன்
1950-ம் ஆண்டு
பங்குனிமாதம் 23-ந் திகதி

## திருப்பாடுகளின் ஞாயிறு ஓர்மகா செபதினம்

அப்போஸ்தொலிக்க ஸ்தானபதியிடமிருந்து நமக்குக் கிடைத்துள்ள திருமுகத்தை நமது மேற்றிராசனத்திலுள்ள குருப்பிரசாதிகளினதும், விசுவாசிகளினதும் கவனத்துக்கும், அனுசாரத்துக்குமாக அறியத்தருகின்றோம்.

சனசமூகத்தின் சன்மார்க்க மறுமலர்ச்சியையும், தேசங்கள் மத்தியிலே மனஒற்றுமையையும் கண்டடைந்துகொள்ளும் நோக்கமாய்ப் பரிசுத்தபிதா பன்னிரண்டாம்பத்திநாத பாப்பரசர் திருப்பாடுகளின் ஞாயிறை ஓர் விசேஷ செபநாளாக ஏற்படுத்திச் சாதாரணநிருபம் ஒன்று விடுத்திருக்கின்றார். அந்நிருபத்திலே பரிசுத்தவருடம் தமக்குக்கொண்டுவந்திருக்கும் மனஆறுதலைத் தெரிவிப்பதோடு, எங்குமே பரந்துகொண்டுவரும் துன்மார்க்கமும், சனசமூகங்களிடையே வகுப்புவாதக் கலகங்களும், தேசங்களிடையே மனவேற்றுமைகளும், போராயுதங்களைப்பெருக்கும் போட்டிப்பலாபலனும் ஆதியனவாய் மனிதவர்க்க முழுவதையும் துன்புறுத்திவருகின்ற பெருந்தீமைகளையிட்டுப் பாப்பரசர் தமக்குண்டான அங்கலாய்ப்பை விளக்கமாகக் காண்பிக்கின்றார். அத்தகைய ஓர்பயங்கர நிலைமைக்கு முக்கியகாரணம், மனிதர் தேவனைப்புறக்கணித்து அலட்சியம் பண்ணுவதும், திருச்சபையுடன் போர்தொடுத்திருப்பதுமே என்று பரிசுத்தபிதா கூறுகின்றார். இத்தீமைகளுக்கெல்லாம் ஓர் பரிகாரம் கண்டுகொள்ளுமாறு தேவதொண்டில் இடையறாது உழைக்கும்படியாக மேற்றிராணிமார்களையும், குருமாரையும், கத்தோலிக்கசேவா அங்கத்தவர்களையும் பாப்பரசர் பரிவாகக் கேட்டுக்கொள்ளுகின்றார். வத்திக்கான் மகாஆலயத்திலே திருப்பாடுகளின் ஞாயிறன்று தாம் நடத்தவிருக்கின்ற பிரசித்தசெபங்களிலே கலந்துகொள்ளும்படியாக எல்லோரையும் அழைக்கின்றார்.

பரிசுத்தபிதாவின் வேண்டுகோளுக்கிசைந்து நாமும் நமது மேற்றிராசனத்திலே திருப்பாடுகளின் ஞாயிறை ரோமாபுரியுடனும், கத்தோலிக்கஉலகம்முழுவதுடனும் ஐக்கியப்பட்ட ஓர் விசேஷசெபநாளாக ஏற்படுத்துகின்றோம். அன்றுசாயந்தரம் திருச்சிலுவைப்பாதையும், செபமாலையும் முடிந்தபின்னர் திவ்வியசற்பிரசாதம் வைக்கப்பட்டிருக்கும் கோவில்களிலெல்லாம் உலகத்தின்பாவங்களுக்குப் பரிகாரமாகத் திருமணித்தியால ஆராதனை நடைபெறவேண்டும். ஏனையகோவில்களிலே பதினைந்துகாரணிக்கங்கள் கொண்ட முழுச்செபமாலை ஓதப்படவேண்டும்.

அன்றுதினம் விசுவாசிகள் திவ்வியநற்கருணைபெற்றுப் பரிசுத்தபாப்பரசரின் கருத்துகளுக்காக ஒப்புக்கொடுக்கும்படியும் ஞாபகப்படுத்தவேண்டும்.

✠ ஜே. ஏ. கியோமார், O. M. I.
யாழ்ப்பாணமேற்றிராணியார்

## சீவந்தரான வேதசாட்சிகள்

கிறீஸ்துசமயம் ஸ்தாபகமானபின் கடந்துபோன பத்தொன்பதரை நூற்றாண்டுகளிலும் அத்திருவேதத்திற்காகப் பாப்புமாரென்றும், கருதினல்மாரென்றும், மேற்றிராணிமாரென்றும், குருமார், சந்நியாசர், கன்னியரென்றும், சாதாரணகிறீஸ்தவர்களென்றும் எண்ணிலடங்காதபேர்கள் குரூரவேதனைகள் அனுபவித்து, இரத்தஞ்சிந்தி உயிர்துறந்து வேதசாட்சிகளாகியிருக்கின்றார்கள். வேதகலாபனைகளின்போது கிறீஸ்துநாதருக்காகத் துன்புறுத்தப்பெற்றுக் கொடியவாதை வேதனைகளைப்பட்டு உள்ளபடியே உயிர்விடுகிறவர்கள்தான் வேதசாட்சிகள் என்று பொதுவிலே பலரும் எண்ணுகின்றனர். ஆனல், இவர்களைவிட வேதசாட்சிகளின் நிரையிலே இன்னுமோர்வகுப்பார் இருக்கின்றனர். அவர்கள்யாரெனில், கிறீஸ்துநாதருக்காக உயிரைக்கொடாமல் வேதசாட்சிகளாகச் சீவிப்போரே. இவர்கள், கிறீஸ்துநாதருக்காக அன்றேல் அவரது சத்தியபோதனைகளுக்காகத் துன்புறுத்தப்பெற்றுநீங்காத துன்பவாழ்க்கை நடத்துவோரே.

வேதசாட்சிகளாகத் திருச்சபையாலே அர்ச்சியசிஷ்டப்பட்டஞ் சூட்டப் பெற்றவர்களின் தொகையோ [illegible] இன்னும் கிறீஸ்துநாதருக்காகத் தங்கள்உயிரைக் கொடுத்திருந்தும் அப்பட்டஞ்சூட்டப்படாதவர்களின் தொகையோ அதிலும்மிகப்பெரிது. ஆனல், உள்ளபடியே வேதத்துக்காகத் தங்கள்உயிரைக்கொடாமலே கிறீஸ்துநாதருக்காகவும், அவரது வேதப் பிரமாணத்துக்காகவும் பெரும்வாதைவேதனைகளை அனுபவித்துவர விடப்பட்டிருக்கிறவர்களின்தொகையை யாரால் எடுத்துச்சொல்லமுடியும்? இவர்களே உண்மையாக இரண்டாவதுவகுப்பு வேதசாட்சிகளில் அடங்கியவர்கள். அதாவது வேதசாட்சிகளாகச் சீவித்துவருகிறவர்கள்.

நிற்க, இன்றையஉலகில் நமது திருமீட்பரான யேசுக்கிறீஸ்துநாதரின் போதனையைத் தாபித்து அதன்மட்டிலே நிலையான உறுதியுடன் நிற்பதையிட்டுக் கம்யூனிஸ்தரின் முகாங்களிலிருந்து வாடிவருந்திப் பெரும் வேதனைகள் அனுபவித்துக்கொண்டிருக்கிறவர்களைக் கவனிப்போம். சொல்லின்பொருளைப் பொதுவிலேஆராயுமிடத்து இவர்கள் வேதசாட்சியத்துவத்தின் வெற்றிக் குருத்தோலைகளுக்கு இன்னும் அருகராகவில்லை. ஆனல், இவர்கள் அதிகம் உண்மையிலே சீவந்தரான அதாவது உயிரோடிருக்கும் வேதசாட்சிகள். இவர்கள் வேதத்துக்காக இறவாதிருக்கலாம். ஆனல், இவர்கள் அனுபவிக்கவேண்டியிருக்கும் கொடிய வேதனைகளும், பீடைதுன்பங்களும் இவர்களை உள்ளபடியே சீவந்தரான வேதசாட்சிகள் என்று அழைப்பதற்கு உரிமையாக்கிவிடுகின்றன. ஹங்கேரியதேச கருதினல் மின்ட்சென்ரி ஆண்டவரும் இத்தகையவேதசாட்சிகளில் ஒருவராவர். கம்யூனிஸ்த ஆட்சியின்கீழ் சிறைச்சாலையொன்றிலே கிறீஸ்துநாதருக்காக அவர்வாதைப்பட்டு வருந்தவேண்டியவரானர். இன்றைக்கும் கொடியவேதனை அனுபவித்துவருகின்றார்.

## சுதேசவர்த்தமானம்

### காலநிலை

பங்குனி வெயில் பகபகென்று எறிக்கின்றது. காலமழை பெய்துகொடாமையாலே யாழ்ப்பாணத்தில் இம்முறை நெற்பயிர் சேதமாயிற்று. சமீபத்திற் பெய்த அகாலமழையாலே மா, முருங்கைகள் ஆதியவற்றின் பலனும் கிட்டாமற்போயிருக்கிறது.

### ரோமைத் திருயாத்திரை

கொழும்பிலிருந்து இம்மாசம் 30-ந் திகதி வியாழக்கிழமை பிரயாணமாகவிருக்கின்ற பரிசுத்தவருட இலங்கைத் திருயாத்திரிகர் கோஷ்டியில் சேர்ந்துகொள்வதற்காகச் சம்பத்திரிசியார்கல்லூரி உபதலைவரான வண. பி. ஏ. ஜோண் சுவாமியவர்கள் நேற்றைத்தினம் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குச் சென்றிருக்கின்றார். அவர் பிரயாணப்படும்போது, கல்லூரி ஆசிரியர்களும் மாணவர்களும் யாழ்ப்பாண றெயில்வேஸ்றேஷனிலே திரளாகக்கூடிநின்று சந்தோஷமாக அவரை வழியனுப்பிவைத்தார்கள். சுவாமியவர்கள் சிந்தாத்திரையாகச் சென்று தமது திருயாத்திரையை இனிதே முடித்துச் சேமமே நம்மத்தியில் திரும்பவும் வந்துசேரத் திருவருளை [illegible]ம்.

### தபசுகால ஞானஒடுக்கம்

யாழ்ப்பாணப் பட்டணத்திலே இவ்வாரத்தில் சந்தியோகுமையோர் கோவிலில் தபசுகால ஞானவொடுக்கம் வண. சற். என். குரூஸ் சுவாமியவர்களால் போதிக்கப்படுகிறது. இது வருகிற ஞாயிற்றுக்கிழமை காலையுடன் முடிவாக அன்று சாயந்தரம் பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதாவின் ஆசனக்கோவிலிலே ஆண்பிள்ளைகளின் ஞானவொடுக்கம் ஆரம்பமாகும். வண. ஏ. மிக்கேல்சாமி சுவாமியவர்கள் போதகஞ்செய்வார் அன்று சாயந்தரம் பரிசுத்த அடைக்கலமாதா கோவிலிலும் ஞானவொடுக்கம் ஆரம்பமாகும். வண. எல். ஜே. அகஸ்ரீன் சுவாமியவர்கள் போதகஞ்செய்யவிருக்கின்றார்.

### புதிய பிரதம நீதியரசர்

இலங்கைப் புதிய பிரதம நீதியரசராக நியமனஞ்செய்யப்பெற்ற சங். ஈ. ஜி. பி. ஜயதிலக அவர்கள் சென்ற 21-ந் திகதி செவ்வாயன்று ஏனைய நீதியரசர்கள், அற்றேணி ஜெனறல், சொலிசிற்றர் ஜெனறல், நீதிபதிகள், வழக்கறிஞர்கள் பலரும் திரளாகக் கூடியிருந்த சமுகத்திலே சத்தியப்பிரமாணஞ்செய்து தம்பதவியைக் கையேற்றிருக்கின்றார். புதிய பிரதமநீதியரசர் ஓர் உத்தம கத்தோலிக்கர். கத்தோலிக்கர் பிரதமநீதியரசர் பதவிக்கு உயர்த்தப்பெற்றுத் தங்கள் கடமைகளைத் தங்களுக்கும், தங்கள் திருமறைக்கும் கண்ணியமாக நடத்தியமை இதுதான் முதன்முறையன்று. சேர் தோமஸ் டி சம்பாயோ, சேர் பிரான்சீஸ் சூடஸ் எனும் கத்தோலிக்க பிரமுகர்கள் இதற்குமுன் இப்பதவியை வகித்திருக்கின்றார்கள். புதிய நீதியரசர் சென் வின்சென்ற் டி போல்சபை மத்தியசங்கத்தின் தலைவராயிருந்தும், மற்றும் கத்தோலிக்க ஸ்தாபனங்கள்மட்டிலே மிக்கான கரிசனையெடுத்தும் சிறப்பாகச்சமயசேவை ஆற்றிவந்திருக்கின்றார்.

### பாராளுமன்ற விடுமுறை

பாராளுமன்றப் பாஸ்குவிடுமுறை வருகிறசித்திரைமாதம் 4-ம் அல்லது 5-ந்திகதி ஆரம்பமாகுமெனத் தெரியவருகிறது. விடுமுறைமுடிந்து அது திரும்பவும் கூடும்நாள் திட்டமாக இன்னும் குறிக்கப்படவில்லை. ஆனல் வருகிறஆனிமாதத்து இரண்டாவது அல்லது மூன்றாவது வாரம்வரையில்தான் கூடும்போலிருக்கிறது. அதனல் பாராளுமன்ற அங்கத்தவர்களுக்கு இருமாதங்களுக்குச் சற்றேகூடியவிடுமுறை கிடைக்கவிருக்கிறது.

### மந்திரிமாரும் விடுமுறையும்

அடுத்துவரும் பாஸ்குவிடுமுறை காலத்திலே பிரதமர் டி. எஸ். சேனநாயக அவர்கள் பர்மாவைத் தரிசிக்கவிருக்கின்றார். சுகாதார – ஸ்தலதாபன மந்திரியாரும், பிரதிநிதிகள்சபை முதல்வருமான திரு. பண்டாரநாயக அவர்கள் ஜெனிவாநகர்சென்று அங்கு நிகழவிருக்கின்ற உலகசுகாதார ஸ்தாபன மகாநாட்டிற்குச் சமுகங்கொடுக்கவிருக்கின்றார். நிதிமந்திரியார் திரு. ஜயவர்த்தன அவர்கள் ஆஸ்திறேலியாவுக்குச்சென்று, தென்கிழக்கு ஆசியாவுக்குப் பொருளாதார உதவிசெய்யும் திட்டவிஷயமாய் ஆலோசிக்குமாறு அங்கே கான்பெறு நகரில்கூடும் மகாநாட்டில் கலந்துகொள்ளவிருக்கின்றார்.

### நயினதீவுத் தெலிபோன்சேவை

போஸ்ற்மாஸ்றர் ஜெனறலின் பாரியாரான ஸ்ரீமதி இக்னேஷஸ் பெறேரா சென்ற 17-ந்திகதி வெள்ளிக்கிழமை நயினதீவு உபதபாற்கந்தோருக்கும், யாழ்ப்பாணப்பெரியதபாற்கந்தோருக்குமிடையிலே கம்பியில்லாத தெலிபோன் சேவையை ஆரம்பித்துவைத்தனர். அத்தருணம் போஸ்ற்மாஸ்றர் ஜெனறல் சென்றவருடம் தாம்கொடுத்த உறுதிவாக்கை ஞாபகத்துக்குக்கொணர்ந்து, அந்தவாக்குறுதியை நிறைவேற்றிவைக்கக்கூடியதாகச் செய்துவிட்ட தபால் – தந்தி மந்திரியாருக்கு நன்றி பாராட்டினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசுத்தவருடக் கிறீஸ்துநாதர்

தென்னமெரிக்காவிலே ஆர்ஜென்ரீனா - சிலிஎனும் நாடுகளினிடையே அந்தீஸ்மலையிலுள்ள ரிரூமென் கணவாயின் முன்புறமாகப் "பரிசுத்தவருடத்தின் கிறீஸ்துநாதர்"எனும் நாமத்துடன் பிரமாண்டமானவோர் அறையுண்ட திருச்சுரூபம் சென்றமாசிமாசம் 26-ந்திகதி ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அதிலே "திருமீட்பராகிய கிறீஸ்துநாதருக்கு வந்தனைவழிபாடாகவும், சிலியர்கள், ஆர்ஜென்ரீனியர்களின் சகோதர ஐக்கியத்துக்குப் பிரமாணிக்கமாகவும், நன்றியறிதலாகவும்" என்று வரையப்பட்டிருக்கிறது. அந்தீஸ்மலையில் மற்றோர்கணவாயிலே உலகில் மகாப்பேரான திருச்சுரூபங்களில்ஒன்றாய் "அந்தீஸ்மலையின் கிறீஸ்துநாதர்" எனும் மற்றோர்சுரூபம் கடந்த 46 வருடங்களாக நிறுவிநிற்கின்றது. இது ஆர்ஜென்ரீனாவுக்கும் சிலிக்குமிடையில் ஏற்பட்ட அபாயகரமான எல்லைப்பிணக்கைத் தீர்த்துவிடுமாறு இங்கிலாந்தின் ஏழாவதுஎட்வாட்அரசர் மத்திட்சம்செய்து 1902-ம் ஆண்டு நிறைவேற்றிய உடன்படிக்கையின் ஞாபகமாயும், இருநாடுகளுக்குமிடையில் கிறீஸ்துநாதரின் திருநாமத்தால் நிரந்தரசமாதானத்தின் பிணையாகவும் திகழுகின்றது.

### யப்பானிய மனந்திரும்புதல்கள்

யப்பானிலே கத்தோலிக்க திருமறையில் தாமாகவேவந்து சேர்ந்துகொள்ளத்தேடும் யப்பானியர்களின்தொகை அத்துணைபெரிதாயிருப்பதாலே மனந்திரும்புவாரை ஆங்காங்கு தேடிச்செல்லக் குருமார் நேரமில்லாமல் இருக்கின்றனர். தற்போது அங்கே 15,000 பேருக்கு மேற்பட்ட யப்பானியர் ஞானஸ்நானம்பெற ஆயத்தமாயிருக்கின்றார்கள். 1939-ம் ஆண்டு இவ்வாறுஆயத்தமாய் இருந்தவர்கள் 3,000 பேரே. குருமார் மிகச்சிலராய் இருப்பதாலே மனந்திரும்புவார் எவருக்கும் தனிப்பட வேதசத்தியங்களைப் படிப்பிக்க முடியாதிருக்கிறது. அதனால் கூட்டங்கூட்டமாக அவர்களுக்கு வேதசத்தியங்களைப்படிப்பிக்க வேண்டியிருக்கிறது. கத்தோலிக்கராகவிரும்புவாரில் அதிகமானோர் உயர்தரக் கல்விபெற்றவர்களாதலின் அவர்களுக்கு வேதசத்தியங்களைப்படிப்பிக்க வேதகாரியகளில் மிக்கானஅறிவுபடைத்தவர்களே தேவைப்படுகின்றார்கள்.

### பாப்பரசரும் அணுக்குண்டும்

அணுக்குண்டு உலகத்துக்கு அறியப்பட இருவருடங்களுக்கு முன்னரே பரிசுத்தபாப்பரசர் அதன்பரிநாசசக்தியை எடுத்துக்காட்டி உலகத்தைஎச்சரித்திருந்தாரென மொஞ். புல்ரன் ஷீன் எனப்பெயரிய பேரான அமெரிக்ககுருவானவர் சொற்பொழிவொன்றில் கூறியிருக்கின்றார். அணுக்குண்டின் உள்ளபடியானவெடிக்கும்சக்தியைப் பற்றித் தெரிவித்தபின் பாப்பரசர் கூறியபோது: "அணுக்களின் சேர்க்கையிலிருந்து உற்பத்தியாகும் சக்தி குண்டுகளுக்குப்பிரயோகிக்கப்படக்கூடாது. ஆனால், தகுதிவாய்ந்தவிஞ்ஞானசாஸ்திரமுறைகள்கொண்டுஅது கட்டுப்படுத்தப்படவேண்டும்; அன்றேல்உலகில்ஓர்தனிப்பட்ட இடத்தில்அல்ல, நமது முழுக்கிரகத்துக்குந்தானும் அபாயகரமான இடையூறு ஏற்படுவதாகும்"எனத் தெரிவித்தனர். பரிசுத்தபிதாஅவர்கள் 1943-ம் ஆண்டு மாசிமாதம் பாப்பரசின் விஞ்ஞானசாஸ்திரகழகத்தில் பேசியபோது மேற்சொல்லியவாறு கூறினர்.

### பாப்பரசரின் பாட்டனார்

வத்திக்கான்தினவர்த்தமானியான 'ஒசேர்வாத்தோறே ரோமானோ'எனும்பத்திரிகையை அடியிட்டபெருமைதற்போதைய பன்னிரண்டாம்பத்திநாதபாப்பரசரின் பாட்டனாராகிய சிஞ்ஞோர் மேர்க்கன்ரோனியோ பச்செல்லிஅவர்களுக்கே உரியதாகும். அவர் இதனை 1861-ம் ஆண்டு அடியிடலாயினர். அப்போதுஅவர் பாப்பரசுக்குரிய நாடுகளின் அரசாங்க உள்நாட்டுஉபமந்திரியாராய் விளங்கியிருந்தார். இதனைஅவர் ஓர் அரசியல் - சமயப்பத்திரிகையாக நிர்மாணித்து, அக்காலத்திலே பரிசுத்தஸ்தானத்தின் உத்தியோகபூர்வமான 'ஜியோர்னேல் தி ரோமா' எனும் பத்திரிகைக்கு இதை ஓர் அனுபந்தமாகஆக்கிவிடலாயினர். 1870-ம் ஆண்டு இத்தாலியபடைகள் ரோமைநகரைக் கைப்பற்றியபோது, 'ஜியோர்னேல் தி ரோமா' மறைந்துவிட, 'ஒசேர்வாத்தோறே ரோமானோ'வே பாப்பரசரின் ஒரேயொரு பத்திரிகையாயிற்று.

### கத்தோலிக்க மந்திரிமார்

சமீபத்தில்நடைபெற்ற பிரித்தானிய பொதுத்தேர்தலிலே சகலகட்சிகளிலும் அபேட்சகர்களாய்நின்ற 70 கத்தோலிக்கரில் 22 பேர் தெரியப்படலாயினர். அதனால் புதிய பாராளுமன்றத்திலே கத்தோலிக்கரின் தொகை பழையதிற்போன்று சமனாயிருக்கிறது. இவர்களிலே 16 பேர் தொழிற்கட்சியினர். 4 பேர் பரம்பரைக்கட்சியினர். 2 பேர் ஐரிஷ்தேசீயவாதிகள். முந்தியபாராளுமன்றத்தில் அங்கத்தினராயிருந்த கத்தோலிக்கரான தொழிற்கட்சியினர் எல்லோருமே திரும்பவும் தெரியப்பெற்றதோடு, திரு. பாற்பாட்லி என்பவர் புதிதாகவும் தெரியப்படலாயினர். தற்போது பிரதமர் அற்லிஅவர்களின் புதிய அரசாங்கத்திலே திரு. றிச்சேட் ஸ்ரோக்ஸ்எனும் கத்தோலிக்கர் புதிதாக மந்திரிபதவி வகித்திருக்கின்றார். பேக்கென்ஹாம் பிரபுவும், திரு. ஜோண் வீற்லி அவர்களும் முன்போலவே மந்திரிமாராய் இருக்கின்றார்கள்.

### பிரசாதிபதியின் வாழ்த்து

பன்னிரண்டாம் பத்திநாத பாப்பரசரின் திருமகுடதாரணை பதினொராவதுவருட நிறைவு விழாவாகிய நிகழும்பங்குனி மாதம் 12-ந்திகதியன்று இந்திய பிரசாதிபதியாகிய டக்றர் இராஜேந்திர பிரசாத்அவர்கள் பரிசுத்தபிதாவுக்குத் தந்திமூலமாக அனுப்பிவைத்த வாழ்த்துச் செய்தி வருமாறு:—"தங்கள்மகுடாபிஷேகத்தின் பதினொராவது வருட நிறைவுவிழாவாகும் இந்தச்சந்தர்ப்பத்திலே இந்தியஅரசாங்கத்தினுடையவும், இந்திய மக்களுடையவும் இருதயபூர்வமான வாழ்த்துகளைத் தங்களுக்குச் சமர்ப்பிக்கின்றோம்" என்பதுவே.

### சமாதான திருச்சிலுவை

ரோமாபுரியிலே வருகிறஆடிமாசஇறுதியில் நிகழவிருக்கின்ற கிறீஸ்துவின் சமாதான இயக்க உலகமகாநாடு நிமித்தமாக ஜேர்மனியிலே ஆச்சென்நகரிலிருந்து ஓர்"சமாதான திருச்சிலுவை" சென்ற விபூதித் திருநாளன்று ரோமாபுரியை நோக்கித் தனதுபிரயாணத்தின் முதற்பகுதியைத்தொடக்குவதாயிற்று. 'கரியமரம்' கொண்டு செய்யப்பெற்ற இந்தப்பாரிய சிலுவை றைன்நதிநீளம் விசாரணைப்பங்கிலிருந்து விசாரணைப்பங்குக்கு ஓர்நீராவிக்கப்பலிலே சுவிற்சர்லாந்துதேசவேல் நகர்போய்ச் சேருகிறவரையில் பிரயாணஞ்செய்யும். பின்னர் அங்கிருந்து ஆச்சென்நகரிலிருந்துபோகும் யாத்திரிகரால் ரோமாபுரிவரையில் எடுத்துச் செல்லப்படும்.

### கத்தோலிக்கரான புத்தகுரு

சீனாவிலே ஷாங்காய்மாகாணத்திலே சிங்-வென்எனுமிடத்திலுள்ள புத்தஆச்சிரமத்தைச் சேர்ந்த கோபாய்-சிங் எனும் புத்தகுரு மனந்திரும்பி ஷாங்காய் நகரிலுள்ள அர்ச். சூசையப்பர் கோயிலிலே ஞானஸ்நானம்பெற்றுக் கத்தோலிக்கராகியிருக்கின்றார். புத்தகங்கள், பத்திரிகைகளை வாசித்ததின் விளைவாக இவர்கிறீஸ்துவசமயத்தில்கவர்ச்சிகொண்டு ஓர் புரொட்டெஸ்தாந்த குழுவினரால் கிறீஸ்துவேதபயிற்றி பெற்றுவரும்போது நோய்வாய்ப்பட்டு ஷாங்காய்நகரிலுள்ள அர்ச். மரியநாயகிஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவரும்போது, கத்தோலிக்க திருச்சபையைப்பற்றிக் கன்னிகாஸ்திரிமார்மூலம் அறிய வந்து, [illegible] ஆராய்ச்சியின் பின் 1949-ம்ஆண்டு புத்தசமயத்தைத்துறந்து சமீபத்திலே வண. யோசெவ் சங் சுவாமியாரால் ஞானதீட்சை அருளப்பெற்றனர்.


அதிஷ்டம் ஐயா! யாருக்கு? மீன்பிடி தொழிலாளருக்கே.

"வலை மால்"

இப்பொழுது எங்களால் ஏராளமாகத் தருவிக்கப்பட்டு, மிகவும் திறமானதாகவும், நல்லமுறுக்குள்ளதாகவும், குறைந்த விலைகளில் மீன்பிடிப்பதற்குத் தேவையான தோலி வலைமால்கள், மடிமால்கள், மற்றஎல்லாவித தினுசுகளிலும் கீழ்க்கண்ட இடங்களில் விற்பனைக்குத் தயாராய் இருக்கின்றன.

எங்களிடமே உங்கள் தேவைகளைப்பெற்று மிகவும் லாபகரமாய்த்திருப்தி அடையுங்கள்.

வி. பி. பி. மூலமாகவும் ஆடர்கள் அனுப்பப்படும்.

ஏ. எஸ். பெர்னாண்டோ & பிரதர்ஸ்,

நம். 85, கிரேண் ஸ்றீட், "சந்திவலைக்கடை" நீர்கொழும்பு.

நம். 79, யூனியன் பிளேஸ், கொம்பனித்தெரு, "ஸ்லேவ் ஐலன்ட்" கொழும்பு, 2.


## பிரியதத்த வங்கி

| | |
|---|---|
| **பிரியதத்தம்** | |
| இதுவரையிற்சொல்லியது | 27,16,649 |
| கடந்தவாரம் சொல்லியது | 5,06,399 |
| மொத்தம் | 32,23,048 |
| **சேபமாலை** | |
| இதுவரையிற்சொல்லியது | 1,99,473 |
| கடந்தவாரஞ்சொல்லியது | 5,838 |
| மொத்தம் | 2,05,311 |

## அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ் சபை

அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ் சபை மாதாந்தக்கூட்டம் பங்குனி மாதம் 31-ந் திகதி பிற்பகல் 4-30 மணிக்கு அர்ச். ஞானப்பிரகாசியார் கூட்டசச்சாலையில் நடந்தேறும். அவ்வேளை மூன்று சகோதரர்கள் தமது நவாப்பியாசகாலத்தை முடித்து உறுதிப்படுத்தப்படுவார்கள். நாலு பரிசோதனை அங்கத்தவாகள் தமது நவாப்பியாசகாலத்தைத் துவக்குவார்கள். சித்திரை மாதத்தில் அங்கத்தவர்கள் பரிபூரணபலன்களை அடையக் கூடிய தேதிகளாவன:— 4, 6, 9, 16, 21, 23, 24, 25, 28 (2), 30. நிபந்தனைகள் வழமைப்பிரகாரம். பின்வரும் தேதிகளில் பொதுப்பாவமன்னிப்பு அடையலாம்:— 2, 3, 4, 5, 6, 7, 8, 9.

A. S. Francis of Mary
for Director

❀ யப்பானியதேச நாகாசகி நகருக்குமேலாக வீசப்பட்டு வெடித்த அணுக்குண்டு ஏறக்குறையப் பதினாயிரம் கத்தோலிக்கரைக் கொன்றுவிட்டபோதிலும் 1939-ம் ஆண்டு அத்தேசத்தில் 1,17,000 கத்தோலிக்க இருந்தவிடத்திலே தற்போது 1,38 000 கத்தோலிக்கர் அங்கே இருக்கின்றார்கள்.

❀ ரோமாபுரியிலே வருகிற ஆவணி மாதம் 25-ந் திகதி முதல் புரட்டாசி மாதம் 2-ந் திகதி வரையிலே சர்வதேச பந்தய விளையாட்டுப்போட்டி ஒன்று நடந்தேறவிருக்கிறது. பல நாடுகளிலுமிருந்து ஆயிரம் பந்தயவிளையாட்டுக் காரர்வரையில சென்று அதிற் கலந்துகொள்ளவிருக்கின்றார்கள். புரட்டாசி மாதம் 3-ந் திகதியன்று பாப்பரசர் அவர்களுக்குப் பேட்டியருளுவார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## யர்ழ்ப்பாண மேற்றிராசன சேமலாபசங்கம்

## 21-ம் வருட அறிக்கை

இச்சங்கத்தின் முகாமைச்சபை சமர்ப்பித்துள்ள வருடாந்த அறிக்கையும், 1948-ம்ஆண்டு மார்கழிமாசம் 31-ந்திகதியுடன் முடிவான ஒரு வருஷக் கணக்குவிபரமும் வருமாறு :

அங்கத்தவர்கள் :— 1948-ம் ஆண்டு மார்கழிமாசம் 31-ந்திகதியன்று சங்கம் முதலாம்வகுப்பில் 119 பேரும், இரண்டாம்வகுப்பில் 631 பேரும், மூன்றும்வகுப்பில் 480 பேருமாக மொத்தம் 1,230 அங்கத்தவரைக் கொண்டிருந்தது. இவர்களில் 36 பேர் புதிதாகச் சேர்க்கப்பட்டார்கள். இவ்வருடத்தில் 9 பேர் மரிக்க, 31 பேர் சங்கஉரிமையை இழந்துபோயினர்.

கட்டுப்பணம் :—இவ்வருடத்தில் மொத்தம் 14,399-00 ரூபா கட்டுப்பணமாக அங்கத்தவரிடமிருந்து கிடைத்திருக்கின்றது.

மரண நன்கொடை :— இவ்வருடத்தில் மரண நன்கொடையாக 8,855 ரூபா 95 சதம் கொடுக்கப்பட்டது. இறந்த அங்கத்தவர்களின் சாட்டுதல்காரராய் இந்நன்கொடையைப் பெற்றுக்கொண்டவர்களின் நாமங்கள் பின்வருமாறு :

| வகுப்பு | நம்பர் | பெயர் | இடம் | தொகை ரூ. ச. |
|---|---|---|---|---|
| 1 | 205 | செ. பிரான்சீஸ் லோகு | பேசாலை | 1,124-45 |
| 3 | 304 | ச. அன்னம்மா | மண்டைதீவு | 574-60 |
| 2 | 695 | வ. அந்தோனி | மயிலிட்டி | 943-60 |
| 3 | 184 | ரோசா கஸ்பாறு | பருத்தித்துறை | 579-65 |
| 2 | 88 | வெ. பிலிப்பையா | யாழ்ப்பாணம் | 997-35 |
| 2 | 945 | சூ. பேதுருப்பிள்ளை | இளவாலை | 909-95 |
| 2 | 229 | ஞானப்பு மரியான் | பருத்தித்துறை | 996-80 |
| 3 | 342 | அ. யோ. பிலிப்புப்பிள்ளை | யாழ்ப்பாணம் | 577-95 |
| 3 | 150 | அ. மரியாம்பிள்ளை | பருத்தித்துறை | 588-65 |
| 3 | 409 | மேரியோசப்பின் வஸ்தியாம்பி. | யாழ்ப்பாணம் | 582-75 |
| 2 | 170 | மெற்றில்டா அந்தோனிப்பி. | யாழ்ப்பாணம் | 980-20 |
| | | | மொத்தம் ரூபா | 8,855-95 |

சேமிப்பு :— தற்போது 1,28,218 ரூபா 34 சதம் சேமிக்கப்பட்டிருக்கிறது.

முடிவுரை :— இவ்வருடத்திலே கையொப்பப்பணமாகச் சேர்ந்த தொகை 14,399-00 ரூபா. இத்தொகையை சென்றவருடக் கையொப்பப்பணமாகிய 12,577 ரூபா 55 சதத்துடன் ஒப்பிட்டுப்பார்க்குமிடத்து, இவ்வளவு அதிகமானதொகை இச்சங்கத்தின்ஆயுளில் எந்தஒருவருடத்திலாவது சேரவில்லை. இதற்குக்காரணம் வருவது :—

(a) அங்கத்தவர்கள் சேமிக்கும்மனப்பான்மையைக் கற்றுக்கொண்டமை.

(b) நிலுவைஅங்கத்தவர்கள் சங்கத்தின் நன்மையை உணரும்படி அருட்டப்பட்டமை.

கடைசியாகச் சங்கம்1948-ம்ஆண்டு மார்கழிமாச முடிவில்விடுத்த துண்டுப்பிரசுரத்திலே, மரண நன்கொடையாக 98,311 ரூபா 40 சதம் இறந்தஅங்கத்தவர்களின் சாட்டுதலாளருக்குக் கொடுத்திருப்பதாகக் குறிப்பிட்டோம். தற்பொழுது கையிருப்பு 128,218 ரூபா 34 சதம். கடந்த 21 வருடகாலமாக வளர்பிறைபோல் வளர்ந்துவந்த சேமலாபசங்கம் உறுதியுள்ள ஸ்தாபனமாய் விளங்குகின்றதெனநாம்பெருமையோடு கூறலாம்அன்றோ !

நன்றியுரை :— இம்மேற்றிராசன குருமார் இச்சங்கத்துக்கு ஆற்றிவரும் பேருதவிக்காகச் சேமலாபசங்கத்தின் முகாமைச்சபையார் அவர்களுக்கு என்றும் கடமைப்பட்டிருக்கின்றனர்.

முகாமைச் சபையின் போரால்.
கைச்சாத்து: **A. J. செல்வத்துரை**
கௌரவ காரியதரிசி.

21 கார்த்திகை 1949.

### வருடாந்த பொதுக்கூட்டம்

சங்க பொதுக்கூட்டம் நிகழும் பங்குனிமாதம் 5-ந்திகதி காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம், கத்தோலிக்கிளப் மண்டபத்திலே நடந்தேறியது. அங்கத்தவர்களும், இளவாலை, சுன்னாகம், காங்கேசன்துறை, பட்டணப்பகுதிகளிலிருந்து அநேக பிரதிநிதிகளும், திரளாகச் சமுகமளித்திருந்தார்கள். முகாமைச்சபைஅக்கிராசனர்திரு.எஸ். ஜேம்ஸ்அவர்கள் தலைமைவகித்தனர். மேற்றிராசன ஐக்கியசங்கஅதிபரும், ஞானவிசாரணைத்தலைவரும், நிர்வாகசபை அங்கத்தவர் பலரும், குருமாரும் சமுகமாயிருந்தார்கள்.

அச்சிட்டுஏலவே அங்கத்தவர்கள்மத்தியில் பரப்பப்பட்ட வருடாந்தஅறிக்கையும், கணக்குவெளியீடும் கூட்டத்தில் ஏகமனதாக வாசித்ததாக அங்கீகரிக்கப்பட்டன. சங்கத்தைத் திறம்படநடத்தும் விஷயமாய் ஆலோசனை கூறிச் சங்கஅங்கத்தவர்களிடமிருந்தும், விசாரணைப்பங்குகளிலிருந்தும் வந்த கடிதங்கள் வாசிக்கப்பட்டன.

பண்டிதர் சவிரிமுத்து அவர்கள் பொதுக்கூட்டத்தின் ஆலோசனைக்கென்று மூன்றுபிரேரணைகள் சமர்ப்பித்திருந்தனர். விவாதிக்கப்பட்டபின் அவற்றிலொன்று அவரால் மீட்டுக்கொள்ளப்பட்டது. ஏனைய இருபிரேரணைகளும் ஐக்கியசங்கநிர்வாகசபையின்ஆலோசனைக்கு விடப்பட்டன.

அறிக்கையையும், கணக்குவெளியீட்டையும்பற்றித் திரு. ஜீ. ஜே. பெனடிற்அவர்கள் குறிப்புரைகூறியவிடத்து, சங்கத்தின் பணநிர்வாகத்தைத் திறம்படநடத்திப் பணத்தைநன்னிலைக்குக் கொண்டுவந்ததையிட்டும், பணத்தை பக்குவமாகக் கையாண்டுவருவதையிட்டும் நிர்வாகசபைக்குத் துதிசாற்றினர். சங்க பிரமாணங்களைக் கையாளும்பொழுது விசேஷமாய் நிலுவைஅங்கத்தவர்களுக்கு இரக்கம்காட்டவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். அங்கத்தவர்களில்அதிகமானோர் தூரமானகிராமங்களில்வசிக்கும்ஏழைகளும், கருமம் விளங்காதவர்களுமாய் இருப்பதால் அவர்கள் பிரமாணங்களைக் கடும்நுணுக்கமாய்அனுசரிக்கக்கூடியவர்களல்லஎன்றும், கஷ்டகாலமானதாலும், தொழிலின்மையாலும், வாழ்க்கைச்செலவு அதிகரிப்பதினாலும் 90 வீதத்துக்கு மேற்பட்டோர் சிக்கனவாழ்க்கை நடத்திவருகிறார்கள் என்றும்கூறினார். மேலும்சங்கத்தில் வேதனம்பெறும் உத்தியோகஸ்தர்கள் நேர்மையாக 22 வருடம் வேலைபார்த்து வந்திருக்கிறார்கள்; அவர்களின் நீண்டசேவையையிட்டு அவர்களின் வேதனத்தை இக்காலத்துக்கேற்றவாறு உயர்த்தவேண்டுமென்றும் பேசினார். கூட்டம் ஏகமனதாக அவர்கேள்வியை ஏற்றுக்கொண்டது.

வண. எஸ். ஜே. ஸ்ரான்னிஸ்லாஸ் சுவாமியவர்களும், திரு. ஜீ. எஸ். புவிராசசிங்க அவர்களும், திரு. பெனடிற்அவர்கள்கூறியதற்குஆதரவளித்துப் பேசினார்கள். பண்டிதர் சவிரிமுத்து அவர்கள் முகாமைச்சபை சங்கத்துக்குச்செய்துள்ள சிறந்தசேவைகளைப் பாராட்டி நன்றிகூறுகையில், ஐக்கிய சங்கஅதிபர் திரு. வி. யோசெவ்அவர்களும், முகாமைச்சபை அக்கிராசனர் திரு. ஜேம்ஸ் அவர்களும் சங்கபணத்தைக் கண்காணிப்பாய்ப் பேணிவந்ததைப் பாராட்டிக்கொண்டார் ஈற்றில் செபத்துடன் கூட்டம்முடிவெய்தியது.

### கத்தோலிக்க ஆசிரியைகளின் வருடாந்த ஞான ஒடுக்கம்

வழமைப்பிரகாரம் இம்முறையும் கத்தோலிக்க ஆசிரியைகளின் ஞான ஒடுக்கமானது இளவாலைத் திருக்குடும்பக் கன்னியர்மடத் தாபனத்தில்வரும் சித்திரைமாசம் 12-ந் தேதி பிற்பகல் 4 மணியளவில் ஆரம்பமாகிப் (16-4-50) காலை திவ்விய பூசையோடு முடிவாகும்.

உண்டி, உறையுள் சம்பந்தமான சகலவசதிகளும் வண. தாயார்அவர்களால் செவ்வனே செய்யப்படும். இவற்றை நேரகாலத்தோடு ஒழுங்குபடுத்த வேண்டியிருப்பதால் வரவிருப்பவர்கள் ஏற்கனவே வண. தாயார் அவர்கட்குத் தயவுடன் அறிவிப்பது நலமாயிருக்கும். ஆசிரியைகள் அல்லாத பெண்களும் பங்குபற்றுவதற்கு உத்தரவுண்டு. எனவே தங்கள் ஆன்மலாபத்தை விரும்பும் எவரும் இதில் பங்குபற்றிக் கொள்ளும்படியாக மிக்கவிநயத்துடன் வேண்டிக்கொள்ளப்படுகின்றார்கள்.

### உதிர்ந்த முத்துக்கள்

அலெக்சாந்திரியாநகர் அதிமேற்றிராணியாரின்பெயர் அத்தனாசியுஸ். ஆரியுசைபின்பற்றினபதிதர்கள் அவரை வெகுவாகப் பகைத்துவந்தார்கள். அவர்கள் கிறீஸ்துநாதரைப்பற்றித் தப்பறையான கொள்கைகளைப் போதித்துவந்தார்கள். தங்கள் போதனைகளை எதிர்த்தவர்களையெல்லாம் அவர்கள் விரோதித்தார்கள். அத்தனாசியுஸை எப்படியாவது தொலைக்கவேண்டுமென்று அவர்கள் கங்கணங்கட்டினார்கள். ஒருதுஷ்டப்பெண்ணை ஏவிவிட்டு, அவள் அவர்மீது ஓர் மாபெரும் அபாண்டத்தைச் சாட்டும்படி செய்தனர்.

அதைப்பற்றி விசாரிக்கும்படி ஒரு நாள் நியமிக்கப்பட்டது, அன்று அதிமேற்றிராணியார் குருவானவர் ஒருவருடன் நீதிமன்றத்துக்குச் சென்றார். அந்தக்குருவின் பெயர் திமோத்தி.

அந்தத்துஷ்டப்பெண் மேடைமீதேறிக் தான்சொல்ல விரும்பியதையெல்லாம் சொல்லிமுடித்தாள். அப்பொழுது திமோத்தி சுவாமியார் எழுந்து, "நான் இந்தக்குற்றத்தைச் செய்தேன் என நீ உண்மையாகவே குற்றஞ்சாட்டுகிறாயா?" என்று அவளிடம்கேட்டார்

"ஆம், நீதான் குற்றவாளி" என அவள் துணிவுடன் பதிலளித்தாள்.

"நான்தான் நீ சொல்லும் குற்றம் செய்தவன் என நீ சத்தியம்செய்துகூறுவாயாக ?" எனக் குருவானவர் வினவினார்.

"அது சத்தியம்எனக் கடவுளுக்குமுன் நான் கூறுகிறேன்" என அவள் பதிலளித்தாள்.

"நீ சொல்வதுபொய் என்பதற்கு வேறுஅத்தாட்சி வேண்டாம். என் பெயர் திமோத்தி. அத்தனாசியுஸ் அதோ நிற்கிறார்" என்று அவர்மொழிந்தார்.

அந்த அக்கிரமிகளுடைய சூழ்ச்சி பலிக்கவில்லை.

* * *

பிரான்ஸ்தேசத்து அரசரான லூயிஸ் 1642-ம்ஆண்டு சாகக்கிடந்தார். மரணப்படுக்கையில் அவருக்கு உதவிசெய்யும்படி ஆர்ச். வின்சென்ற் டீ போல் அழைக்கப்பட்டார். அரசரின் அருகில் வின்சென்ற் உட்கார்ந்திருந்தார். "சுவாமி, மரணத்துக்கு மிகச் சிறந்தவிதமாகத் தயார்பண்ண என்ன செய்யவேண்டும்?" என அரசர் கேட்டார். "நம் இரட்சகரது நன்மாதிரிகையைப் பின்பற்றிநடப்பதே மிகச் சிறந்ததயாரிப்பாகும். அவர்தமதுபிதாவின்சித்தத்துக்கு முற்றிலும்பணிந்தமனதுடன் இருந்தார் என்பதை அவருடைய வார்த்தைகள் எண்பிக்கின்றன. என் மனதின்படியல்ல உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடது" என அவர் திரும்பத்திரும்பக் கூறினார்" என அர்ச்சியசிஷ்டவர் பதியளித்தார்.

"என்முழு உள்ளத்துடனும் நமது இரட்சகரின் மாதிரிகையை நான்பின்பற்ற ஆசிக்கிறேன்" என அரசர்கூறினார்.

அரசரின்விருப்பம் பூர்த்தியானது. ஏனெனில், அவர் சாகும்போது பக்கத்திலிருந்த வின்சென்ற் "எத்தனையோ பேர் சாகிறதை நான் பார்த்திருக்கிறேன்; ஆனால் லூயிஸ் அரசரைப் போல் கிறீஸ்துவமேரையாய் உயிர் நீத்தவரை நான் பார்த்ததில்லை" என எழுதிவைத்தார்.

* * *

பிரான்ஸ்தேசத்திலே திஞ் என்னும் பட்டணத்து மேற்றிராணியாரின்பெயர் மியோலிஸ். ஞாயிற்றுக்கிழமைகளில் அவர் திவ்வியபூசை முடிந்தபிற்பாடு நாடுபக்கமாய்ப்போய்ச் சிறுவர்களுக்கு ஞானோபதேசம் கற்றுக்கொடுப்பது அவரதுவழக்கம். ஒருநாள் அவர் இவ்விதம் சென்றபொழுது ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்த ஒருசிறுவனைக்கண்டார். அவன் அன்று பூசை காணவில்லை. ஆடுகளை விட்டுவிட்டுக் கோவிலுக்குப்போகக்கூடாதென அவனது எசமான் அவனுக்கு உத்தரவிட்டிருந்தான். "தம்பி, இன்று ஞாயிற்றுக்கிழமை, பூசைக்குப்போகக் கடமையுண்டு. நீ போய்ப் பூசைகண்டுவா. நான் அதுவரை ஆடுகளைக் கவனித்துக்கொள்கிறேன்" என மேற்றிராணியார் கூறினார். அவன் கடைசியில் சம்மதித்துத் தன்கோலை அவரிடம் கொடுத்துவிட்டுச் சென்றான்.

ஆடுகளின் சொந்தக்காரன் தான் வேலைக்கு அமர்த்தியிருந்த பையனைக் கோவிலில் பார்த்தான்; அவனுக்குக் கோபம்உண்டாயிற்று ; அவனிடம் விரைந்துபோய் "ஆடுகளைவிட்டுவிட்டுக் கோவிலுக்கு ஏன்வந்தாய்?" எனக் கேட்டான்.

"எனக்குப்பதிலாக ஒரு குருவானவர் ஆடுகளைக் கவனித்துக்கொண்டிருக்கிறார்" எனச் சிறுவன் மொழிந்தான்.

"குருவானவரா? குருவானவரா? அவன் திருடனாய் இருக்கவேண்டும்; மாறுவேடம்போட்டுக்கொண்டு, ஆடுகளைத்திருட்டிச்செல்ல வந்திருப்பான்" எனச்சொல்லிச் சிலமனிதர்களைத் தன்னுடன் சேர்த்துக்கொண்டு, திருடனைப்பிடிக்கும் நோக்கத்துடன் வெளியே ஓடினான். ஆட்டுமந்தையைச் சேர்ந்ததும் எல்லோருக்கும் ஓரே பிரமிப்பாய்ப்போயிற்று. ஆடுகளின்மத்தியில் மேற்றிராணியார் ஆயர் கோலைப் பிடித்துக்கொண்டு நிற்பதைப் பார்த்தனர். அவர் ஒருசில வார்த்தைகளே பேசினார். ஞாயிற்றுக்கிழமைப்பூசை காண்பதன் முக்கியத்துவத்தைப்பற்றி அவர்கள் அதுபோன்ற ஓர் பிரசங்கம் முன்னர் கேட்டதில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண மேற்றிராசனத் துணை ஆயர்

## மகாவந். ஜே. எமிலியானுஸ்பிள்ளை, O. M. I.

## ஆண்டகையவர்கள்

நெடுந்தீவுக்கருளிய முதற்தரிசனையின்

# ஞாபகபாக்கள்

— ஞானி —

I

எங்களரும் தயாநிதியே! எமில்யானுஸ் பிள்ளையெனும்
இருளோட்டுங் குளிர்மதியே! ஏந்தலே! எழுந்தருள்க!
செங்கமல மதிவதனு! திருச்சபைக்கோர் செஞ்சுடரே!
தெய்வமணம் பரிமளிக்கச் செய்பவனே எழுந்தருள்க!

II

நின்னரிய மந்தைகளின் நிலைகாண எழுந்தருள்க!
நிகரிலா வளனிறைந்த நெடுந்தீவே யெழுந்தருள்க!
பன்னரிய கோயில்திருப் பணிகாண எழுந்தருள்க! [க!
பக்தியொடு நின்கரத்தை முத்திசெய்தோம் எழுந்தருள்

III

கண்டவரைக் கலக்கிவரும் "மலையடி"யுங் கங்கையைப்போற்
காட்சிதரும் ஆண்டகையே! களிப்புடனே எழுந்தருள்க!
மண்டலத்தோர் கண்டுவக்கும் "மாவலி"யும் முதலுமக்கு
மனம்நிறைந்ததுதியுரைக்கும் மாதவனே! எழுந்தருள்க!

IV

சாதிமத பேதமிலாத் தன்மைகள்நீர் பார்த்திடலாம் [லாம்
தாயெனவே உபசரிப்பார் தனித்தகைமை நோக்கிட
ஆதிபரம் பரைக்கதைகள் அத்தனையுங் கேட்டிடலாம் [ள்க!
ஆன்மநலன் காக்குமெங்கள் ஆண்டவனே! எழுந்தரு

V

கோவேந்தே! தெங்கிளநீர்க் குலைகள்பல தூக்கிவரும்
கொள்கலத்தில் விண்ணமுதைக் கொண்டுபனை நோக்கி
வரும்
பாவேந்தர் உரைக்கவொண்ணப் பாலாறு பாய்ந்துவரும்
பாரித்த தருக்களெல்லாம் பைம்பொன்முடி சாய்ந்து
வரும்

VI

குயிலினங்கள் நின்வரவைக் குரலெடுத்துப் பாடிடுமே
குலவுகின்ற மயிலினங்கள் குதித்துநட னிடுமே
அயில்விழியார் அமுதூட்டும் அஞ்சுகங்கள் கொஞ்சிடுமே
ஆவலுடன் பூவையினம் அளாவுகதை மிஞ்சிடுமே

VII

வால்வளைகள் ஊர்ந்துவரும் வயல்வளப்பங் கண்டிடலாம்
மலைக்குவியற் தானியங்கள் வானவரும் உண்டிடலாம்
சேல்எழுந்து பார்த்துவக்குந் திரை கடலில் நீந்திடலாம் [ம்
செந்தமிழின் மணங்கலந்த தென்றலுலாப் போந்திடலா

VIII

தேருமுயர் பரியினங்கள் தெரிந்ததனில் ஏறிடலாம்
தெய்வகற்பச் சோலையிலே சென்றுகளை யாறிடலாம்
வாரும் "பசுத் தீவி"னது வளனெடுத்துப் பாடிடலாம்
மனத்துவகை பூக்குநல்ல வனத்துவேட்டை யாடிடலாம்

IX

பூசைசெய்யும் ஆலயங்கள் ஆசையொடு பார்த்திடலாம் [ம்
பொன்போலும் குருமனைகள் மடாலயங்கள் நோக்கிடலா
தேசுசெய்யும் ஓசர்கல்விச் சாலைகளின் சீர்த்தியெல்லாம்
திசையனைத்தும் இசைபரப்புந் திருமனத்தைப் பூர்த்தி
செய்யும்

X

சித்திரக்கை வேலைநிறை திறவூனைத்துங் காணும்மே [மே
தெய்வமயன் ஈங்கிருந்தே செனித்தான்போற் தோணும்
புத்தமுதக் கவிசொரியும் புலவர்தரு விருந்தெலாம்
போதுமெனப் புரவலனே! நீயிருந்தே யருந்தலாம்

XI

கப்பல்சிறு கட்டுமரத் தோணிநிரைக் காட்சியையும்
கருங்கடலைத் துரும்பெனவே கணிக்குமுள மாட்சியையும்
செப்பமுறும் வங்களாக் கோட்டைகளின் சீர்த்தியையும்
செப்பலாமோ சீமைநின்று வந்துசெல்வார் நேர்த்தி
யையும்

XII

திரித்துவத்தின் அருள்விளக்குஞ் செஞ்சுடரே எழுந்தருள்க!
சிறகணைத்துக் காக்குமெங்கள் செல்வத்தாய் எழுந்தருள்க!
சிரித்தமுகங் காட்டிவரும் சீமோனே! எழுந்தருள்க!
திருப்பாத தெண்டனிட்டோம் தேவாசீர் ஈந்தருள்க!

## தமிழ்ப்பெரும்புலவர் வீரமாமுனிவர்

ஸ்ரீமத். சுவாமி சித்பவானந்தர்

திருச்சி, அர்ச். சூசையப்பர் கல்லூரியிலே சமீபத்தில் நடந்தேறிய சுவாமி வீரமாமுனிவர் விழாவில் தலைமைவகித்துச் ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் கூறியதாவது:

ஒரு நாட்டின் பண்பாடு, ஒழுக்கம் ஆகியவற்றைப் பரிமாறி, அருள்விருந்து செய்யக் கருவியாயிருப்பது அந்நாட்டின் மொழியாகும். இம்முறையில் இத்தாலி நாட்டினின்று இந்தியநாடு போந்து, மொழித்தொண்டு செய்த முனிபுங்கவருள் வீரமாமுனிவரும் ஒருவர். அண்ணல் யேசுவின் அருள் மொழிக்கேற்ப, உலகத்தின்உப்பாக இருந்து உயர்தொண்டாற்றும் மேலோர்கூட்டத்துள் நம்புலவர் வீரமாமுனிவரும் ஒருவர். மனிதஇனத்துக்கும், மொழிக்கும்உள்ள மதிப்புக்குரிய தொடர்பினை நிரூபித்துக்காட்டிய தூயதமிழ்ப்புலவர் நம்முனிவர்.

கன்னித்தமிழ், செந்தமிழ், காலத்தால் மாறுபடாத தமிழ்—என்று பலபடியாகச் சிறப்பிக்கப்படும் பண்டமிழ் மொழியைத் தம்முடையதாக ஆக்கிக்கொண்டு, விருப்பு வெறுப்பற்ற தூய தமிழ் வாழ்க்கையையும் தம்முடையதாக அமைத்துக்கொண்டு தமிழருள் தமிழராகக் கலந்துவிட்ட தனிப்பெருமை வீரமாமுனிவருக்கே உரியது. தமிழன்னையின்மேல் தாம்கொண்ட அன்பினால், தம்முடையபெயரையும் தனித்தமிழில் வீரமாமுனிவர் என்று அழகாக மாற்றிக்கொண்டு, தேம்பாவணி, திருக்காவலூர்க் கலம்பகம் முதலிய தேனொழுகும் காவியங்களையும் தமிழன்னையின் காலடியில்சூட்டி உள்ளம் உவந்தார் நம்பெருந் தமிழ்ப் புலவர்.

அன்னாருடைய விழாவை இன்று கொண்டாடுகின்ற தமிழர்களாகிய நாம் அவருடைய அடிச்சுவட்டைப்பின்பற்ற உறுதிகொள்ள வேண்டும். அவருடைய வாழ்வின் உயிரோட்டமாக ஓடக்கூடிய உழைப்பு, ஊக்கம் என்ற இந்தஉயரிய இரண்டு பண்பாடுகளையும் நாம் நம்முடையவாழ்வில் கடைப்பிடித்தால் அதுவே நம்அருந்தமிழ்ப் பெரும் புலவர் வீரமாமுனிவருடைய ஈடும் எடுப்புமற்ற தியாகத்திற்குத் தமிழர்கள்செய்யும் கைம்மாறு ஆகும். அதன் வழி, நாம் நம்முடைய மொழிக்கும், நாட்டுக்கும் நல்லதொண்டாற்றியவர்களாவோம். வாழ்க வீரமாமுனிவரின் புகழ்!

பின், "தமிழும் தமிழும்" என்பது பொருளாகத் திரு. அருளப்பன் சொற்பொழிவாற்றுகையில், புறநானூறு, கம்பராமாயணம், சிலப்பதிகாரம், தேவாரம், திருவாசகம்ஆகிய தமிழ் நூல்களின் நயங்களையும் தனிப்பண்புகளையும் அழகாக விளக்கித் தமிழ் மொழிக்கு ஐரோப்பியதேசத்தினர், குறிப்பாக வீரமாமுனிவர்செய்த பணிகளை விவரித்தார்.

## மாடுகளுக்குக் குறி

தென்மராட்சிக் காரியாதிகாரி (டி. ஆர். ஓ.) யாகிய திரு. எஸ். பி. தெய்வேந்திரம்பிள்ளை அப்பகுதியிலுள்ள மாடுகளுக்கெல்லாம் குறிசுடவேண்டுமென்பதை ஊக்கப்படுத்திவருகின்றார். அதனால் ஒவ்வோர்மாசத்திலும் முதலாம், இரண்டாம், மூன்றாம் ஞாயிற்றுக்கிழமைகளிலே 24 கிராமங்களுள் ஒவ்வொன்றிலுமுள்ள அந்தந்தக் கிராமத் தலைமைக்காரரின் கந்தோர்களில் மாடுகள் குறிசுடப்படவிருக்கின்றன. பாவமான செயலென்று பலவருடங்களின்முன் கைவிடப்பட்டிருந்தஇந்த முறை தற்போது திரும்பவும் அங்கே நடைமுறைக்கு வந்திருக்கிறது. இதனால் மாட்டுக்களவுகள் குறையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## தடுமலும் தும்மலும்

நின்றநிலையிலே இரண்டு மூன்று கவளம் சோற்றை அள்ளிவாயில் வீசிவிட்டுக் குடையையும் எடுத்துக் கக்கத்தில் இடுக்கிக்கொண்டு அவசரம்அவசரமாகப் போவதற்கென்று வீட்டுப்படியில் காலைவைத்ததும் "ஸ். ஸ். ஸ்... ஸைக்" என்று என்சிறுகுழந்தைதும்மிவிட்டது. பொதுவாக யாராவது ஒரு பணிவிடைக்காகப் புறப்படும்பொழுது வேறொருவர் தும்மிவிட்டால் ஏதோ காரியம் அனுகூலமாகாது என்று நாம் எண்ணிக்கொள்ளுகிறோம். நாம் அபசகுனங்களாகக் கருதுவனவற்றில் தும்மலும் ஒன்று. அதுவும் விசேஷமாகக் கலியாண வைபவத்தில் தாலி கட்டும்பொழுது யாராவது ஒருவர் தும்மிவிட்டால் விவாகவீட்டாருடைய தலையில் இடிவிழுந்ததுபோல் இருக்கும். சிலவேளைகளில் நட்டுவனார் கொட்டும் மேளச்சத்தம் தும்மலை அமுக்கிவிடுகிறது. இருந்தபோதிலும் தும்மினவருக்கு மனத்தில் வேதனை உண்டாகிறது. இதுநிற்க, நான் புறப்படும்பொழுது பிள்ளை தும்மினதும் எனக்கு நெஞ்சிடிக்கத் தொடங்கிவிட்டது. "பிள்ளைக்கு ஏதோ தடிமல் கிடிமலாயிருக்கவேண்டும்; அது தான் தும்மிவிட்டது" என்று எனக்கு நானே சமாதானம் கூறினேன். "இல்லை, இவ்வளவுநேரமும் தும்மாமலிருந்த பிள்ளை நான் புறப்படும் பொழுதுதானு தும்மவேண்டும்" என்றும் யோசிக்கவேண்டியிருந்தது. "என்னவானாலும்சரி நடக்கிறது நடந்தே தீரும்"என்று மனதில் அரைநிம்மதியோடு புறப்பட்டேன். அன்றைய விஷயம் நூற்றுக்கு நூறுவீதம் "சக்செஸ்." அதன்பின்னர்தான் "தும்மல்" என்ற விஷயத்தைப்பற்றி ஏதாவது எழுதலாமென்று நினைத்தேன். உடனே எனக்கே கொட்டாகாசம் சீறிக்கொண்டெழும்பிக் கொட்டும்சீறி வெடித்தமாதிரி ஒரு தும்மல்வந்தது. மூக்கையே நசித்துப்பிடித்துத் தடுக்கப் பார்த்தேன். சரிப்போகவில்லை. "எடிற்றர்" கையில் என்னென்ன பாடுகள் நான் படப்போகிறேனே என்றபயத்தோடு இதை எழுதஆரம்பித்தேன்.

"ஐயா, பத்திராதிபர் அவர்களே! என்னுடையதும்மலை ஓர் அபசகுனமாகக் கொள்ளவேண்டாம், எனக்கு உண்மையாகவே சரியான தடுமல். மெடிக்கல்சேட்டிபிக்கேற் வேணுமென்றாலும் நான் காட்டுவதற்குத் தயார். ..... யாரும் தும்மினலென்ன தும்மாவிட்டாலென்ன, வாழ்த்தினலென்ன தூற்றினலென்ன எமக்கு அதைப்பற்றிக்கவ்லையில்லை. ஆனால் தடுமல் நோய்வந்துவிட்டால் சும்மா செம்மறியாடு தும்மினமாதிரிக் கண்ட இடங்களிலெல்லாம் தும்மாதேயுங்கள். ஒருகைக்குட்டைஇருந்தால் தும்மும் பொழுது மூக்கை அதனால் மூடிக் கொள்ளுங்கள். தடுமல்காய்ச்சல் ஒரு பொல்லாதவருத்தம். அது எங்கும் பரவாதபடிக்கு வேண்டிய தடைமுறைகளைக் கையாளுங்கள். அபசகுனம் சுபசகுனமென்பது எல்லாம்வீண்.

தி. க.

## தபசுகாலம்

தபசுகாலத்தில் வாசிக்கவேண்டிய ஞானவாசினைப் புஸ்தகங்களும், ஒப்பாரி, புலம்பல், அம்மானை, வியாகுல பிரசங்கம், செபப்புஸ்தகங்கள் முதலியனவும்—சுரூபம், செபமாலை, குருசு, வரவணிக்கம், தூபவர்க்கம் முதலியனவும் விற்பனைக்குத் தயாராக இருக்கின்றன.—வீ. பீ. ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும். வியாபாரிகளுக்கும், தொகையாகப் புஸ்தகங்கள் வாங்குவோருக்கும் விசேஷகழிவு கொடுக்கப்படும்.

ம. வஸ்தியாம்பிள்ளை அன் சன்ஸ்
பிரபலபுத்தகவியாபாரிகள்
பெரியதெரு—யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசுத்தவருடச் செபயுத்தத்தின்பேரில்

## திரிகோணமலை மேற்றிராணியாரின்

# தபசுகால ஆயர் நிருபம்.

(முன்தொடர்ச்சி)

பரிசுத்தவருடத்தின்நோக்கங்களைப் பெற்றுக்கொள்வதற்காக நமதுமேற்றிராசனத்தில் கையாளப்படவேண்டிய வழிகள்:—

நமது செபயுத்தத்தை இலேசாய்ச் செய்கைமுறைக்குக் கொண்டுவரும் பொருட்டுப் பின்வருபவைகளை விதிக்கின்றோம். நமதுஆண்டவரின் திரு இருதயமும், நமதுபரிசுத்ததாயின் மாசில்லாதஇருதயமுமேஎங்கள்செபங்களினதும், பரித்தியாகங்களினதும் வாய்க்கால்கள்ஆகும். இந்தப்பிரகாரம்,

1. திருஇருதயத்தின் விருப்பத்துக்கும், முன்மாதிரிக்கும்இணங்கச் செபத்தின்பேரில் உற்சாகத்தைஊட்டும்வழியாக ஒவ்வொருவிசாரணைப்பங்கிலும் செபஅப்போஸ்தலசபை ஸ்தாபிக்கப்படல்வேண்டும்.

2. திருஇருதயத்தின் விசேஷ ஆசீர்வாதங்கள் நமதுமேற்றிராசனத்துக்குக் கிடைக்கும்பொருட்டு ஒவ்வொரு விசாரணைப்பங்கும் தனதுகுடும்பங்களை இந்தப்பரிசுத்தவருடத்தில் திருஇருதயத்துக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும்.

3. ஒவ்வொருமாதத்தின் முதல் வெள்ளிக்கிழமைக்கும் முந்தியநாளில் எல்லாவிசாரணைப்பங்குக் கோவில்களிலும் திருமணித்தியாலம் அநுசரிக்கப்படல்வேண்டும். அந்தநேரத்தில் பரிசுத்தவருடத்தின் கருத்துக்களுக்காக மன்றாடவும்வேண்டும். இந்தத் திருமணித்தியால ஆராதனையை அநுசரிக்கும்படி எல்லோரையுந் தூண்டுகின்றோம்.

4. திருஇருதயத்தின் இரக்கத்தைப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்ற பலமானவழிகள் திவ்விய பூசையும் தேவநற்கருணை பெறுதலுமே. ஆதலால் ஒவ்வொருவிசாரணைப்பங்கும், கலாசாலையும், மடமும் அடிக்கடி பூசை காணவும், நமதுஆண்டவரைத் தேவநற்கருணையில்பெறவும் ஊக்கமானஓர் முயற்சியைத் தொடங்கவேண்டும். பரிசுத்தவருடத்தில் ஒவ்வொருநாளும் தேவநற்கருணைபெறுபவர்கள் தங்களுக்கும், உலகத்துக்குமாக எவ்வளவு அற்புதமான வரப்பிரசாதங்களைப் பெறுவார்கள். இவ்விதஞ்செய்யமுடியாதவர்கள் திவ்வியபூசைகண்டு முன்னர்வழக்கமாய்ப் பெற்றதைப்பார்க்கிலும், வாரத்தில் ஒருமுறையாகுதல் மேலதிகமாய்த் தேவநற்கருணைபெறத் தீர்மானிப்பார்களாக.

5. நமதுபரிசுத்ததாயும் நம்முடைய இந்தப்பரிசுத்தமுயற்சியில் தம்முடைய பங்கையும் செய்துமுடிக்கவேண்டும். அவளின் தாய்க்குரியசகாயத்தைப் பெறுவதற்காக ஒவ்வொரு மாதத்தின் முதல்சனிக்கிழமையிலும் நமதுஎல்லா விசாரணைப்பங்குக் கோவில்களிலும்—கூடுமானால், மடம்போன்ற மற்றத் தாபனங்களிலும்—தேவநற்கருணை ஆசீர்வாதம் இருக்கவேண்டும். ஆசீர்வாதநேரத்தில் தேவமாதாவின் மாசில்லாத இருதயத்துக்குச் செய்யும் ஒப்புக்கொடுத்தலைப் புதுப்பிக்கவும்வேண்டும்.

6. நமதுபரிசுத்தமாதாவின் அன்பையும் பாதுகாப்பையும் பெறுவதற்கு ஏற்ற ஓர்வல்லபமுள்ளவழி அவளின் திருச்செபமாலையே. ஆதலால் கட்டளைக்குருமார் பத்திக்கூட்டங்களின்வழியாய்க் குடும்பங்களில்இருந்து தினமும் செபமாலைஓதும் கூடியதொகைப் பிரதிக்கினைகளைச் சேர்ப்பார்களாக. இந்த ஊக்கமான பத்திமுயற்சி முடிந்தவுடன் கட்டளைக்குருமார் தங்கள்தங்கள் விசாரணைப்பகுதியில்சேர்ந்த பிரதிக்கினைகளின் முழுத்தொகையையும் நமக்கு அனுப்பிவைப்பார்களாக.

7. ஆனிமாதத்தில் "யாத்திரைக் கன்னி"என்று அழைக்கப்படும் பாத்திமா மாதா தம்வரவால் நமது மேற்றிராசனத்தை வெகுவாய் மகிமைப்படுத்துவாள். திருச்செபமாலையைக் கூடியபத்தியோடுஓதுதலே அவளின் வரவால் நாம்அடையும் பிரதானபலனாகும். செல்வமானபலன்களை உடையதும், பரிசுத்தவருடத்துக்காகப் பரிசுத்தபிதாவால் இயற்றப்பட்டதுமான செபம் ஞாயிற்றுக்கிழமையில் ஆசீர்வாதநேரத்தில் சொல்லப்படல்வேண்டும். இந்தச்செபத்தைத் தினமும் எல்லோரும்சொல்லும்படி உற்சாகம் ஊட்டுகின்றோம்.

8. நமதுமேற்றிராசனத்தில் இந்தப்பரிசுத்தவருடம் ஓர்பெரிய மன்னிப்பையும், ஓர்பெரிய மனந்திரும்புதலையும் கொண்ட ஓர்வருடமாகவும் இருக்கும்படி பாவமன்னிப்புக்காகச் சொல்லப்படும் செபத்தைக் (No.22) கனமானகாரியத்துக்காகச் சொல்லப்படும்செபமாகப் பூசையில் பாவிக்கவும்.

யேசுக்கிறீஸ்துநாதரில் வண. குருமாரே, அன்பார்ந்தபிள்ளைகளே, கடைசியாய் நமதுபரிசுத்தபிதாவின் அழைப்புக்கு முழுமனதோடு காதுகொடுக்கும்படி உங்களைத் தூண்டுகின்றோம். இவ்விதஞ்செய்வீர்களேயாகில் உங்கள் செபங்களினாலும், பரித்தியாகங்களினாலும், முன்மாதிரியாலும் இந்தப்பரிசுத்தவருடமானது பரிசுத்தபிதா இயற்றிய செபத்தில்சொல்லப்பட்டதுபோல் சுத்திகரிப்பையும், அர்ச்சிப்பையும், ஆத்துமசீவியத்தையும், பரிகரிப்பையும், ஓர்பெரியமனந்திரும்புதலையும் மன்னிப்பையுங்கொண்ட ஓர் வருடமாய் இருக்கும். ஆமென்யேசு.

✠ இன்னுசியார் கிளேனி, யே. ச.
திரிகோணமலை மேற்றிராணியார்

கவனிப்பு:—பரிசுத்தபிதா இயற்றிய பரிசுத்தவருடச்செபத்தில் அவர் விரும்பும் பரிசுத்தவருடத்துக்குரிய கருத்துகள் கூறப்படுகின்றன. அதைச்சொல்லும் ஒவ்வொருமுறையும் ஏழுவருடப்பலனையும், ஒருமாதகாலம் தினமும் சொன்னால் ஓர்பரிபூரணபலனையும் அடையலாம்.

---

❀ சமீபத்திலேபாத்திமாநாயகியின் சுரூபம் தூத்துக்குடிநகருக்கு எழுந்தருளியபோது, அந்நகர சபையின் பேரால் அதன்தலைவர் திரு. வி. எஸ். சுந்தரவேல்அவர்கள் மாதாவைநல்வரவேற்றுக் காணிக்கை சமர்ப்பித்தபின் மகாவந். தூத்துக்குடி மேற்றிராணி ஆண்டவர் 500 சிறந்தமுத்துக்கள் பதித்து இழைக்கப்பட்ட தங்கமாலை ஒன்றைப் பாத்திமாமாதாவின் கழுத்தில் தரிக்கலாயினர்.

❀ தென்னமெரிக்காவிலே பிறேஸில் நாட்டிலுள்ள சிவில் உத்தியோகஸ்தர்களில் ரோமாபுரிக்குப் பரிசுத்தவருட திருயாத்திரைசெய்ய விரும்புவாருக்கெல்லாம் அந்நாட்டின் பிரசாதிபதியான டெட்ரு அவர்களால் அறுபது நாள் லீவு அருளப்பட்டிருக்கிறது.

❀ சமீபத்தில்நடந்தேறிய பிரித்தானிய பாராளுமன்ற பொதுத்தேர்தலின்போது அங்குள்ள கம்யூனிஸ்த கட்சி பெரும்உத்தண்டத்தில்நின்று நூறு அபேட்சகர்களைத் தேர்தலுக்கு நிறுத்தியிருந்தும் ஒருவராவது பாராளுமன்ற அங்கத்தவராய்த் தெரியப்படாது ஒருங்கே மண்கவ்வினார்கள். அம்மட்டா இந்தஅபேட்சகர்கள் தங்கள் பிணைப்பணத்தையும்இழந்து படுதோல்வியடைந்தார்கள்.

---

## மதித்தற்கரிய கொடையின் நஷ்டம்

### கண்பார்வை குன்றுவதே

வயது போகப்போக, அதாவது ஏறக்குறைய 40 வயசில், அல்லது சிலவேளை அதற்குமுன்தானும் சாமானிய கண்கள் பார்வையில் குன்றும் அறிகுறிகள்காணப்படுகின்றன.

இதுவரை அதிகம்நெகிழ்ந்துஉறளத்தக்கனவாயிருந்த கண்ணின் ஒளிவட்டங்கள் இப்போது கடினமும், விறைத்தனவும் ஆகின்றன. இது முற்றும்இயற்கையான மாற்றமே. இதிலே விளைவதென்ன? கண்ணின் தசைநார்கள் ஒளிவட்டங்களிலே சரியாகக் கருமம் ஆற்றத் தவறுகின்றன. அப்போது இந்தஒளிவட்டங்கள் பல்வேறு தூரங்களுக்குப் பார்வையைச் செலுத்த இடங்கொடுக்க முடியாதனவாகும். அதனால் கண்களிலிருந்து அதிக தூரத்திலுள்ளவைகளைப் பார்க்கவேண்டுமென்ற ஓர்சார்பும், அதிகம் பிரபையான வெளிச்சம் வேண்டுமென்ற விருப்பும் உண்டாகின்றன. எழுத்துகள் களங்கமுற்று ஒன்று மற்றொன்றினுள் சொருகுகின்றன. பகலில் விசேஷமாய்ச் செயற்கை வெளிச்சத்தில் வாசித்தபின்கண்கள் களைகொள்ளுகின்றன. பின்னர் தலையிடி உண்டாகிறது. அநேகமுறைகளில் பார்வைத் தூரம்முற்றும் நன்றாயிருக்கிறது. ஆனால் சமீபவேலைக்கு உதவாதிருக்கிறது.

கண்பார்வையைப் பரிசோதிப்பதிலும், தகுதியான மூக்குக் கண்ணாடிகளைத் தெரிவுசெய்துகொள்வதிலும் நமக்குள்ள அநுபவத்தை உமக்குமுற்றாகக் கையளிக்கிறோம். இக்காலமாதிரியான புத்தம்புதிய கருவிகளெல்லாம் இதுவிஷயமாய் நம்மிடம்கிடைக்கக் கூடியனவாய் இருக்கின்றன.

நல்ல கண்பார்வையுடையவர்கள் மூக்குக்கண்ணாடிகள்போட வேண்டியதில்லை. ஆனால் இவர்களின் நட்பும், ஆதரவும் ஒருமூக்குக்கண்ணாடியை விற்பதிலும் எவ்வளவோ கூடியமதிப்புள்ளன. உமது கண்களில் பழுது காணும்போதுதான் நமது வியாபாரதலத்துக்கு வரும்படி அழைக்கிறோம்.

பத்திருனஸ், பல் - கண் வேலைகள்
28, பெரியதெரு, யாழ்ப்பாணம்.

## உமது உணவை மென்று அருந்துக

உமதுபற்கள் உமக்கு அழகையும், வசீகரத்தையும் மாத்திரம் தருவன அல்ல. ஆனால், உமது உணவை நன்றாய்மென்று அருந்தவும் உதவுகின்றன. இது நீர் உண்பதை நன்கு சீரணிக்கச்செய்வதில் இன்றியமையாத ஓர்காரியமாகும்.

துரதிஷ்டவதமாய் உமது இயற்கைப் பற்களை நீர் இழந்துபோய் விட்டீரானால், இனி நீர் செய்யக்கூடிய சிறந்த காரியம், செயற்கைப் பல்கட்டும் ஓர்பல்வைத்தியரை நாடிப்போகவேண்டியதுதான்.

நல்லஉறுதியும், நன்றாகநின்று பிடிக்கக்கூடியதுமாய்ச் செயற்கைப்பற்களுக்கு இணையானபிரபையுள்ள அதிகம் புதிய வஸ்தைக்கொண்டு செயற்கையான வரிசைப் பற்களை நாம் செய்துஉதவிவருகின்றோம். இவ்வாறுபற்களை அமைக்கும் முறையானது புதிதாகக்கண்டுபிடிக்கப்பட்ட அதிகம்புதியமுறையாகும்.

தயவுசெய்து ஓர்தரம் நம்மைச்சந்தித்து ஆலோசனை கேட்பீராக! இதற்கு நீர் எவ்வித உபகாரமும் செய்யவேண்டியதில்லை. நாம்செய்யும் ஒவ்வோர்பணிக்கும் உத்தரவாதம் அளிக்கின்றோம். எப்போதும் திருப்தியடைந்து செல்லும் ஆயிரக்கணக்கான வாடிக்கைகாரரே நமதுசிறந்த பிரசித்தகாரர்கள்,

பத்திருனஸ், பல் - கண் வேலைகள்
28, பெரியதெரு, யாழ்ப்பாணம்

---

## தேவை

### மீன்பிடி பலகைவள்ளம்

சுமார் 36 அடி நீளமும், 4 அடி 4 அங்குல அகலமும், 2 அடி 6 அங்குல உயரமும் உள்ள ஒரு மீன்பிடி பலகைவள்ளம் விலைக்குத்தேவையாயிருக்கிறது. பாவித்த வள்ளமாயிருந்தாலும் நல்ல நிலையில் இருக்கவேண்டும்.

விற்கவிரும்புவோர் என்னவிலை, என்ன மரத்தால் செய்யப்பட்டது, பாவிக்கப்பட்டகாலம், அதைப்பார்வையிடக்கூடிய இடம் முதலிய சகலவிபரங்களுடன் 1950-ம்ஆண்டு மார்ச்மாதம் 30-ந்திகதிக்குள் மீன்துறை இலாகாத்தலைவர், தபால்பெட்டி 531, கொழும்பு என்ற விலாசத்துக்கு அறிவிக்கவேண்டும்.

இ. ஆர். ஏ. டி சில்வா
தற்காலீக தலைவர்,
மீன்துறை இலாகா

மீன்துறை இலாகா,
கொழும்பு, 1-3-1950.

## விளம்பரம்

இரணைமடு—பரந்தன் புதுக்குடியேற்றத் திட்டத்தில் குடியேறுபவர்களுக்கு 190 அலவாங்குகளும், 190 மண்வெட்டிகளும், 190 கத்திகளும், 190 கோடரிகளும் கொடுப்பதற்கு, வடமாகாண அரசாங்க ஏசண்டர் 1950-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 4-ந் திகதி செவ்வாய்க்கிழமை பகல் 12 மணிவரைக்கும் விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்வார்.

2. குறித்த விண்ணப்பப் பத்திரங்களை ரூபா10 கொழும்புத் திறைசேரியில் அல்லது எந்தக்கச்சேரியிலாவது கட்டிய ஒவ்வொரு பற்றுச்சீட்டுக்கும் ஒவ்வொரு விண்ணப்பப்பத்திரமாக 1950-ம் ஆண்டு ஏப்பிரல்மாதம் 1-ந் திகதி சனிக்கிழமை பகல் 12 மணிவரைக்கும் கொடுக்கப்படும்.

மறு விபரங்களை வடமாகாண ஏசண்டரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

கச்சேரி
யாழ்ப்பாணம்
9-3-50

பி. ஜே. கட்சன்
வடமாகாண
அரசாட்சி ஏசண்டர்

---

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residgn at 39 Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, March 23 1950.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org